பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 08 | ஞாயிற்றுக்கிழமை | (21-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 93

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
(சி-7311)
சிவன் கோவில் வீதி,
காரைநகர் T.P :
0602212472

## வடக்கின் மாபெரும் போட்டி பெரும் குழப்பத்தில் முடிந்தது

### சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு வெற்றியென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் பரியோவான் கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெற் போட்டி இறுதி நேரத்தில் பெரும குழப்பத்தில் முடிந்தது.

135 ஓட்டங்களைப் பெற்றால், வெற்றி என்ற ந lலையில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பரியோவான கல்லூரி அணி 4 விக்கெற் இழப்பிற்கு 109 ஓட்டங்களைப் பெற்றது.

இன்னும் 26 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் மிகவும் விறுவிறுப்பாக போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் நான்காவது விக்கெற் இழக்கப்பட்ட நேரத்தில் மைதானத்தை சூழ இருந்த ரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பும்,ஆரவாரமும் ஏற்பட்டது. இதனைப் பயன்படுத்தி மைதானத்திற்குள் நுழைந்த சிலர், வீரர்கள் தொடர்ந்து விளையாட முடியாதவாறு குழப்பம் விளைவித்தனர்.அதேவேளை பந்து வீசும் தளத்தில் திடீரென பெரும் புகை கிளம்பியது, இதனையடுத்து ரசி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் மூவர் கைத்துப்பாக்கியுடன் நேற்று கைது

### அம்பாறை பள்ளிமுனையில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை நிந்தவூர் பள்ளி முனைச் சந்தியில் துறைமுக பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மூன்று பேர் கைத்துப்பாக்கியுடன் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அம்பாறை ஒலுவில் துறைமுக பாதுகாப்பு உத்தியோகத்தர்களான அசோகாநீல், றஞ்சித் சேனநாயக்கா, கேமந்த குமார ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது, துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் பிரஸ்தாப பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவரும் பள்ளிமுனைச் சந்தி ஊடாக சென்று கொண்டிருந்தனர். இவர்களுக்குப் பின்னால் துறைமுக

(12ஆம் பக்கம் பார்க்க)

# இரகசியப் பேச்சுக்களை புலிகள் ஏற்படுத்தவில்லை

## ஜனாதிபதியின் கூற்றை மறுக்கிறார் தமிழ்ச்செல்வன்



(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பொருத்தமானதும், தகுதியானதுமான அரசாங்கத்தை ஏற்படுத்துவது தென்னிலங்கை மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று புதிய அரசாங்கத்தை அமைத்துக்கொண்டபின் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடரப்போவதாகவும், அதற்கு வேண்டிய தொடர்புகளை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தி வருவதாகவும் ஜனாதிபதி கூறிவருவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் சமாதான முயற்சியை மக்கள் அதிகம் விரும்புகின்றனர்

### கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை விட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுவதையே அதிகளவிலான மக்கள் விரும்புவதாகவும், 75 சத வீதமான மக்கள் நாட்டில் யுத்தம் ஏறபடுவதறகு எதிராகக் கருத்து தெரிவித்துள்ளதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய கருத்துக் கணிப்பிலிருந்து தெரிய வந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் தொடர்பு வைக்க நான் என்றும் முயற்சிக்கவில்லை

### கருணா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுடன் தான் தொடர்புகொள்ள என்றும் முயற்சிக்கவில்லை என விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ள கருணா தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில், கருணா தன்னுடன் பல வழிகளிலும் தொடர்புகொள்ள முயன்றதாகவும், எனினும் தான் அதனை நிராகரித்து விட்டதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இக்கருத்துத் தொடர்பாக பதிலளித்த கருணா, மேலும் தெரிவிக்கையில்

ஒரு நாட்டின் தலைவி என்ற முறையில, ஜனாதிபதி பொறுப்பற்ற முறையல் நடந்துகொண்டுவிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு தினம் நல்லூரில் நேற்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 16 ஆவது நினைவுதினம் நேற்று நல்லூர் ஆலய பின் வீதியில் யாழ்-நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசியக்கொடியினை யாழ்.பிரதேசப் பொறுப்பாளர் மைந்தன் ஏற்றிவைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான சீ.வீ.கே.சிவஞானம், கஜேந்திரகுமார், மாவை. சேனாதிராஜா, சொலமன் சூ.சிறில், மற்றும் முச்சக்கர வண்டிகள் சங்கச்செயலாளர் பாஸ்கரன், அரசியல்துறையைச் சேர்ந்த பூமகள் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

பெண் வேட்பாளர் பத்மினி சிதம்பரநாதன்,அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் அன்னை பூபதிக்கு மலர்மாலை அணிவித்தனர். (உ-3)



தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை
தமிழர்களே நிர்ணயிக்க
வீணைக்கு வாக்களியுங்கள்!
வெற்றியை உங்களுடைய தாக்குங்கள்!!



X

(8511)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



திரு.வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
இல. 4

தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....
வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான
சுயேச்சைக்குழு – 01 | X | 4 | 2



திரு.ச.அரவிந்தன்
(முன்னாள் உறுப்பினர் யாழ். மாநகரசபை)
இல. 2

(சி-7449)

## இரு வருட ஆட்சியில் உண்மை புரிந்தது

# நாட்டினை முறையாக நிர்வகிக்கும் திறமை பிரதமர் ரணிலுக்கு இல்லை

## பிரபல சட்டத்தரணி அப்துல் லகீப் விமர்சனம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தினாலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.**

**அத்துடன், நாட்டை முறையாக நிர்வகிக்கும் திறமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என ஜனாதிபதி கூறி வருவதும் யதார்த்த' மானதாகும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரபல சட்டத்தரணி அப்துல் லகீப்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு தனது கருத்துக்களைக் கூறுகையிலேயே அப்துல் லகீப் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

நாட்டை முறையாக நிர்வகிக்கும திறனையும் அனுபவமும் இல்லாதவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவரது இந்த இயல்புகளை கடந்த 2வருட காலத்தில் மக்கள் அனைவரும் புரிந்து கொண்டு விட்டார்கள்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாகவும் நாட்டை அபிவிருத்தி செய்யப் போவதாகவும், நாட்டில் உள்ள சகல இளைஞ்ஙகள் யுவதிகளுக்கும் வேலை வாயப்பு வழங்கப்போவதாகவும் கூறி ஆட்சிக்கு அந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்படி விடயங்களில் எதைத்தான் முழுமையாக செய்து முடித்தது?

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து அதனை முழுமையாக நிறைவு செய்ததா அல்லது நாட்டின் அபிவிருத்திக்கென சர்வதேச நாடுகளிடம் வாங்கிய நிதியை முறையாகப் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்ததா?

எதுவுமே இடம்பெறவில்லை வெறும் ஊழல் மோசடிகள் தான் இடம்பெற்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின காலத்தில்தான் அதிக ஊழல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

சர்வதேச நாடுகளிடம் பெற்ற நிதியை பிரதமர் தனது அமைச்சுக்களுக்கு தாராளமாகப் பகிர்ந்தளித்த போது அந்நிதிகளில் 60 சதவீதமானவற்றை அமைச்சர்கள் தமது சொந்த தேவைகளுக்குப பயன்படுத்தியிருக்கின்றார்கள். இதனாலேயே நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. இதனால் அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டும் எனக் கோரி வேலை நிறுத்தப் போராட்டஙகளை நடத்திவருகின்றார்கள்.

ஆனால், இந்த வேலை நிறுத்தப் போராட்டங்களுக்குக் காரணமாக இருந்த அமைச்சர்கள் "தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் காலத்திலேயே வேலை நிறுத்தப்போராட்டங்கள் தொடர்கின்றனவென்றும் இதற்கு சில அரசியல் கட்சிகள் பின்னணியில் இருக்கின்றன எனவும் கூறி தமது குற்றங்களை மூடி மறைக்க முயல்கின்றனர். மக்களுக்கு இவர்களின் நாடகங்கள் தெரியும்.

கடந்த 2வருடகாலமாகவே சுகாதார ஊழியர்கள் உட்பட பல அரச ஊழியர்கள் வேலை நிறுத்தப்போராட்டங்ளை நடத்தியமை யாவரும்அறிந்த விடயமே.

இவைதவிர ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் காலத்தில் கொலை, கொள்ளைகள், ஆட்கடத்தல், ஆர்ப்பாட்டங்கள் எனப் பல வன்முறைகள் தோற்றம் பெற்றன.

இதனாலேயே ஜனாதிபதி பாதுகாப்பு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை தன் வசமாக்கினார்.

அதன் பின்னர் நாட்டு மக்களின் வேண்டுகோளுக்கமைய பாராளுமனறைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட்டார். காபந்து அரசாங்கத்தை ஏற்படுத்தி சகல அமைச்சுக்களையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

இது ஒரு புறமிருக்க காபந்து அரசாங்கம் என்றால் என்ன? என்பது பற்றி நாட்டு மக்கள் பலருக்கு போதிய விளக்கமில்லை ஏன்? பல அரசியல் கட்சிகளுக்கே காபந்து அரசைப் பற்றி பூரண அறிவில்லை.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் நாட்டின் நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்து விடக்கூடாது என்பதற்காக தற்காலிகமாக அமைக்கப்படும் அரசே காபந்து அரசு எனப்படும்.

இந்தக் காபந்து அரசில் முக்கிய அமைச்சர்கள் மட்டுமே இருப்பார்கள். இவர்கள் அடுத்த ஆட்சி ஒன்று ஏற்பட்டு புதிதாக அமைச்சுக்கள் அமைக்கப்படும் வரை தமது பணிகளை சரிவரச் செய்ய வேண்டும்.

ஆனால், தற்போது உள்ள காபந்து அரசின் கீழ் இயங்கும் அமைச்சர்கள் தமது பணிகளை ஏனோதானோ என்றே செய்கின்றார்கள்.

தொடர்ந்து தாம் அமைச்சராக இருக்கப் போவதில்லை எனக கருதி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகஞ் செய்கின்றார்கள். ஊழல் மோசடிகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றார்கள்.

இத்தகைய ஊழல் மோசடிகள் நிறுத்தப்பட்டு மக்கள் எதுவித கஷ்டங்களும் இன்றி நிம்மதியாக வாழ்வதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட ஓர் சந்தர்ப்பமாகவே இந்த தேர்தல் அமைகின்றது.

ஆட்சிக்கு வரப்போகும் எந்த அரசாங்கமாக இருந்தாலும் அங்கு ஊழல் நிறைந்த அமைச்சர்கள் இருப்பார்களாயின் நாடு குட்டிச்சுவராகிக் கொண்டே இருகக்கும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு மக்கள் தமது வாக்குக்களை முறையாக பயன்படுத்திககொள்ளவேண்டும் என்றார்.

(உ-60,10)


யாழ்ப்பாணம்

ஆ.வேலுப்பிள்ளை & சன்ஸ்

ஆதரவுடன்

வலம்புரி-சங்குநாதம் நடத்தும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004

கருத்துக்கணிப்புப் போட்டி

வினாக்கள்

- 13வது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கும் கட்சி எது?
- யாழ். மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சி, சுயேட்சை ரீதியாக?
- யாழ். மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரின் பெயர்கள்?

இங்கே வெட்டவும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004
கருத்துக்கணிப்பு

முழுப்பெயர் :-............................................

தபால் முகவரி :-............................................

............................................

அ.அ.இல. :-............................................

உங்கள் விடைகளை மார்ச் 31ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

கருத்துக்கணிப்புப் போட்டி

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். போட்டியில் வெல்வோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

குறிப்பு:- உங்கள் விடையுடன் கூப்பன் இணைக்கப்பட வேண்டும்.


## விசேட பயிற்சி பெற்ற படையினர் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நிலை கொணடுள்ள படையினரில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இராணுவ வீரர்களுக்கு விசேட பயிற்சிவழங்கும் நடவடிக்கையில் 4ஆவது பயிற்சித்திட்டத்தின்கீழ், விசேட பயிற்சி பெற்று வெளியேறும் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி பலாலி விமான ஓடுபாதையில் இடம்பெற்றது. இந்தப் பயிற்சிபெற்ற இராணுவ வீரர்கள் விமானம், நிலம் மற்றும் நீர் ஆகியவற்றில் சென்று இலக்குகள் மீது தாக்குதல் நடத்தும் வல்லமை பெற்றுள்ளனர். அதே வேளை, சிறுகுழுவாகத் தாக்குதல் நடத்தும் வகையில் இவர்கள் சிறந்த பயிற்சிபெற்றுள்ளனர்.

இந்த விசேட பயிற்சித்திட்டத்தின் கீழ் இராணுவ அதிகாரிகள் 5பேரும், சாதாரண சிப்பாய்கள் 94பேரும் இந்த 4வது கட்ட விசேட பயிற்சியைப் பெற்றுள்ளனர். இவ்வாறு பயிற்சியைப் பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வழங்கினார். இறுதியில் விசேட பயிற்சிகளைப் பெற்ற இராணுவ வீரர்கள் தாம் பெற்ற பயிற்சியின் அனுபவத்தை அங்கு ஒத்திகைசெய்து காட்டியதுடன், இராணுவ மோட்டார் சைக்கிள் படையினர், கொமாண்டோ மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் விமானத்தில் இருந்து பரசூட்மூலம் குதித்தும் எமது இலக்கை வந்தடைதல் போன்ற நிகழ்வுகளையும் செய்து காட்டினர்.

(உ)






# யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கு புலம்பெயர்ந்த மகனின் பகிரங்க வேண்டுகோள்!

நான் குடும்பத்துடன் ஜேர்மனியில் வாழ்ந்து வருகிறேன். எனது பெற்றோர் தற்போதும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருவதால் பயம் காரணமாக எனது பெயரை வெளியிட விரும்பவில்லை.

நான் சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் குடும்பத்துடன் வந்து சென்றேன். இதுவரை காலமும் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும் என்று விரும்புகின்ற உங்களைப் போலவே நானும் ஒருவனாக இருந்தேன். ஆம்! தாயக மீட்புக்காக ஏங்கியவர்களில் நானும் ஒருவன்.

ஜனநாயகம் உள்ள அனைத்து நாட்டிலும் அனைத்து இனங்கள் மத்தியிலும் பல கட்சி சுதந்திரம் மலிந்து கிடக்கின்றது. அதற்காக அந்த நாடுகள் எல்லாம் அடிபட்டுக் குட்டிச்சுவராகி விடவில்லை.

எனவே பல கட்சி அமைப்புள்ள தெளிவான ஜனநாயகத்தை இந்தத் தேர்தல்மூலம் உ லகிற்கு அறிமுகம் செய்யுங்கள். நீங்கள் தெரிவு செய்பவர்கள் உங்களுக்குச் சேவகம் செய்பவர்களாக இருக்கட்டும். தொடர்ந்தும் வாய்பொத்தி வேலைசெய்யும் அடிமையாக இருக்காதீர்கள்.

வாக்களிக்க முன் சிந்தியுங்கள். உங்கள் வீட்டைப் பூட்டுவதும் திறப்பதும் உங்கள் கையில் இருக்கவேண்டும். எனவே வீடுள்ள உங்களுக்கு அவசியமானது பூட்டு மட்டும்தான்.

-ஜேர்மனியில் இருந்து தமிழ் மகன் ஒருவன்.

## பொறுத்தது போதும் பொங்கி எழு தாயே...!



பொல்லாத அரசியல் பொறுமையைச் சோதிக்குது....
இல்லாதனவெல்லாம் இட்டுக்கட்டிக் குலைக்குது...
கல்லாய், மரமாய், பேயாய், கணங்களாய்
வல் அசுரராய் வாட்டி வதைக்குதம்மா

## பொறுத்தது போதும் எழுந்திரு தாயே...!

'அமுதென்று' பெயரும் வைப்பார் - பொங்கிய
அமுதினை வயிராற உண்டபின்,
'அமிர்' என்று சொல்லி ஏப்பமும் விடுவார் - புளிச்சல்
ஏவறையும் விடுவார்...



## பொறுக்குதா தாயே... பொங்கி எழு...!

...அது நடந்தபோது கிட்ட வராது எட்ட நின்ற கூட்டமிது...
அமீரண்ணா என்று சொல்லிகூப்பாடு போட்டு கூவி அழைக்குது.
'எட்டப்பா' எப்போதும் எட்டத்தில் இல்லை...
பக்கத்தே நின்று.... சந்தர்ப்பம் பார்ப்பார்...!

## பொறுத்தது போதும் பொங்கி எழு தாயே...!

தீட்டானவரெல்லாம் கூட்டாய் சேர்ந்ததால் - என்னவோ
கண்பட்டுப் போனது விடுதலைப்போர்...
மண்போட்டு மூடுதற்காகவா புதையுண்டு போனீர்...!
இல்லை... இல்லை... விண் முட்டக் கேட்கும்
விடுதலைக்கீதம்... அதுவே சுதந்திரத் தாகம்...

## பொறுத்தது போதும் பொறுத்தது போதும்

வல்லோர்கள் சுரண்டும்... பொல்லாத கொடுமை ~ இல்லாமல் நீங்க...
எல்லோரும் சேர்ந்து வாக்களிப்போம்

# வீ.ஆனந்தசங்கரி (தலைவர்- தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

## சுயேச்சைக் குழு - 1



X 4

விளம்பர அனுசரணை - பண்ணாகம் மக்கள்

அறிவித்தல்: எக்காரணம் கொண்டும் சுயேச்சைக் குழு - 1 இத் தேர்தலிலிருந்து விலகிக்கொள்ள மாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம்.

# இயேசுவில் கொள்ளும் விசுவாசமே எமக்கு மீட்பைத் தரவல்லது

இவ்வுலகமானது நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது.காலமாற்றத்திலும் கோடை,மாரி,இலையுதிர், இலை துளிர் காலம் என்று மாற்றங்



களுக்கு உட்பட்டுக் கொண்டே செல்கின்றது. பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையின் நியதியாகிவிட்டது. இல்லையேல் புதுப்பிறப்புகள் இல்லாமற் போயிவிடும்.வேதம் சொல்கின்றது "ஆகவே ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதிய தொரு படைப்புத் தோன்று கினறது.பழையன கழிந்து போயின. இதோ! புதியன தோன்றி யுள்ளன. இவையெல்லாம் கடவுள் செயல் தான்"(2.கொரி.5.17)

**ஆன்மீகப் புது வாழ்வு வேண்டும்**

இறைவனை விட்டுப் பிரிந்து செல்கின்றபோது இறைவன் எம்மைக கைவிட்டு விடுவதில்லை.பலர் தமது இளமைத்துடிப்பினாலும் உலகின் மாயைக் கவர்ச்சிகளினாலும் ஈர்க்கப்பட்டவர்களாக தாய், தந்தையர்களையும் உதறித் தள்ளிவிட்டுச் சென்று புதிய வாழ்வை அடைந்து கொள்ளலாம் என்ற தவறான நோக்கில் விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளைப் போல காலம் கழிக்கின்றனர். இவர்களின் நிலை பரிதாபகரமானது.இப்படியான ஓர்க தையை இயேசு தமது போதன்னை யிலே கூறினார்.

ஒரு தந்தையின் இரு புதல்வர்களிலே,இளையவன் தன்னுடைய சொத்தின் பங்கை விற்று தூர தேசம் சென்று சுகபோக வாழ்வை கழித்து-ஏழையானான்.கூலிக்கு பன்றி மேய்த்தான் அப்போது பன்றி உணவுகூடச் சிலவேளை அவனுக்கு கிடைக்காமல் போனது. அப்போதுதான் அவ்விளைஞன் கவலையுற்றான்.தந்தையின் அன்பை நினைத்தான். பாவ நிலையின் நின்று எழுந்து மீண்டும் தந்தையிடம் வந்தான்.தந்தையோ வழிமேல் விழிவைத்து மகன் வரவைக் காத்திருந்தவர் ஓடோச் சென்று மகனைவரவேற்றுக் கட்டி அணைத்து முத்தமிட்டு மீண்டும் தம்மோடு சேர்த்து புதுவாழ்வை அவனுக்கு அளிக்கின்றார். இன்றைய பிள்ளைகளும் பெற்றோரும் இவ்வாறு செயற்படுவார்களா?

**புதுவாழ்வைத் தெரிந்து கொள்வோம்**

காணாமல் போனதைக் கண்டடையும் போதும்,இழந்து போனதை மீட்கும் போதும் நோயுற்றது குணமாகும் போதும் கஷ்டப்பட்டுச் செய்த பயிர் பலன்கொடுக்கும் போதும் புதிய மகிழ்ச்சி அவர்களிடம் உண்டாகின்றது.பழையவை எல்லாம் அழிந்து புதிய வாழ்வின் தளிர்கள் தோன்றுகின்றன.மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்திலே பகைமைகளை மறந்து. வஞ்சம் தீர்ப்பவைகளைக் கைவிட்டு, குரோத எண்ணங்களால் அலைக் கழிக்கப்படாமல், சாத்தான் விரித்துள்ள இலௌகீக வலையில் வீழ்ந்து விடாமல், இறை வார்த்தையின் ஒளியில் வாழகின்ற போது இறைவனின் வல்லமை எம்மை புதிய வாழ்வின் பயணத்தில் வழிநடத்தும். ஆகவே எமது வாழ்வைப் புதுப்பித்து புதுவாழ்வைத் தொடர் வோமாக.

**நேர்மைக்கே நிச்சயம் வெற்றி**

மக்களின் சுதந்திர உரிமையைச

## பரமபிதா காட்டிய பாதை

சரியான முறையிலே பயன்படுத்தும்போது மக்களுக்கும் புதுவாழ்வுக்கான கதவுகள் திறக்கப்படும். "தேர்தல்" அதற்கான ஒருகளமாகும்.ஒற்றுமையின் பலத்திலேதான் புதுவாழ்வு கட்டப்படும். வேற்றுமையின் தடைக்கற்கள் மறைந்து போகும். அடிமைப்பட்ட மக்கள் வாழ்விலே புதிய வசந்தம் உருவாகும்.

எனவே எங்கேயும் எதிலேயும் உண்மையோடு செயற்பட்டு போலிகளை இனங்கண்டு உண்மைக்குச் சான்று பகர்வோம். இத்தேர்தல் கூட இறைவன் எமது மக்களுக்குத்தந்துள்ள ஓர் சந்தர்பமாகும்.உமது மக்களின் பாலைவன வாழ்விலே இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டைச் சுதந்தரித்துக் கொண்டது போல, எமக்கும் ஒரு புது வாழ்வு மலராமல் போகாது. அதற்குநாம் உண்மையும் நேர்மையும் உள்ளவாகளாகச் செயற் படவேண்டும்.

**,யேசுவைப் பின் தொடர்வோம்**

வாழ்வதோ சில காலங்கள் அதிலே வம்பு,வாதங்களும் வாழ்வில் நிம்மதியைத்தராது. பாலைவனத்திலே பசுந்தரையைக் காண்பது அரிது.விசுவாசமில்லாத கிறிஸ்தவ வாழ்வு அச்சாணி இல்லதா தேர் போன்றது.அடிக்கடி தரை தட்டக்கூடியது. இயேசு கிறிஸ்துவிலே வைக்கும் விசுவாசமே எமக்கு மீட்பைத் தரவல்லது.வாழும் காலத்திலே நாம் செய்யும் தான தருமங்களும் தியாயங்களுமே எமக்கு விண்ணக வாழ்வைப் பெற்றுத் தரக்கூடியன. தவக்காலத்தின் பொருளுணர்ந்து தவறுகளுக்கு மனம் வருந்தி உலகத்தின் மாயைக் கவர்ச்சிகளை வெறுத்து பயன் தரும் வாழ்க்கை வாழ இயேசுவின் பின்னால் நாமும்சென்று மீட்பின் வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

**யாழ்.ஜெயம்தாசன்**

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்இந்து வேளாளர், U.Kயில் குடியுரிமை பெற்ற, 34 வயது, நட்சத்திரம் பரணி,1ம்பாதம், மேடராசி, உயரம் 6 அடி, வெள்ளை நிறம், கல்வித் தகுதி B.S.C.கம்பியூட்டர் எஞ்ஜினியர்,நல்ல குடும்பப் பின்னணியில் உள்ள மணமகனுக்கு பட்டப்படிப்பு முடித்த அழகான மணமகள் தேவை. மற்றும் உள்ள நாட்டு வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ மணமக்கள் தேவைக்கு உடன தொடர்பு கொள்ளவும்.சிவாலயா சர்வதேச திருமண நிலையம் ஸ்ரீவைகுந்த ஆச்சிரமம் 68/15 சட்டநாதர் வீதி (சமுர்த்தி வங்கி அருகில்) நல்லூா யாழ்ப்பாணம (84 49)

### மணமகன் தேவை

யாழ்றோமன் கத்தோலிக்கம்R.C குருகுலம் கனடாவில் குடியுரிமை உடைய 28 வயது, உயரம்5அடி, எக்கவுண் டிப்ளோமா படித்த சிவந்த நிறமுடைய அழகான மணமகளுக்கு பட்டப்படிப்பு முடித்த நல்ல குணமுடைய அழகான மணமகன் தேவை.மணமகள் யாழ்.வந்துள்ளார்.கனடாவில் குடியேற நல்ல வாயப்பு.உடன் தொடர்பு கொளளவும். சிவாலயா சர்வதேச திருமண நிலையம் ஸ்ரீவைகுந்த ஆச்சிரமம்,68/15,சட்டநாதர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.Tel/Fax:021-2222871.
(8437)

### பஸ்தரிப்பு நிலையம் அமைப்பு

ஊர்காவற்றுறை பட்டின சபையின் முன்னாள் தலைவர் றொபேட்டின் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பு நிலையம் ஒன்று நிறுவப் பட்டுவருகிறது.றொபேட்டின் உறவினர்களின நிதியில் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக இவ பஸ்தரப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. (உ-112)

## நக்கீரன் கோபால் மீது அவதூறு வழக்கு

(சென்னை)

பலகோடி ரூபா முத்திரைத் தாள் மோசடியில் தமக்கு தொடர்பிருப்பதாக நக்கீரன் பத்திரிகையில் செய்தி வெளிட்ட அதன் ஆசிரியர் கோபால் மீது தமிழகக் காவல்துறை துணைத் தலைமை ஆய்வாளர் முகமதலி தொடுத்திருந்த அவதூறு வழக்கினை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

இதற்காக நக்கீரன் கோபால் 15இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று, கோரும் அவரது மனுவை விசாரித்த நீதிபதி பாலசுப்பிரமணியம் இதநகு இந்தமாதம் 31ம் திகதிக்குள் கோபால் பதில் மனு தாக்கல்செய்ய வேண்டும் என்றும் இவ்வழக்கு விசாரணை அடுத்த மாதம் 1ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படு வதாகவும் தெரிவித் தார். (து)

## சிறப்புத் தேர்தல் பார்வையாளர்கள்

(புதுடில்லி)

வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு உட்படப் பல மாநிலங்களில் சிறப்புத் தேர்தல் பார்வையாளர்களைத் தேர்தல் ஆணையம் முதன் முறையாக நியமிக்கவுள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில்தலைமைத் தேர்தல் ஆணையர் ரி. எஸ்.கிருஷ்ண மூர்த்தி இதைத் தெரிவித்தார்.

இப்பணிக்காக நியமிக்கப் படவுளள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுவான பார்வையாளர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட கண்காணிப்புப் பார்வையளர்கள் தவிரக் கூடுதலாக இந்தச் சிறப்புப் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றார்.

வேட்பாளர்கள் வேட்பு மனுவுடன் தாக்கல் செய்யும் பிரமாணப் பத்திரங்களையும் செலவுக் கணக்கையும் இந்தப் பார்வையாளர்கள் கண்காணிப்பாளர்கள் என்றும் தேர்தலில் மத்திய படைகளும் மாநிலக் காவல்துறையும் சம அளவில் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்வார்கள் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் கூறினார்.

தேர்தல் சமயத்தில் வன்முறைகள் நடந்தால் உடனடியாக ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். (து)

## தமிழக முதலமைச்சரின் தரக்குறைவான விமர்சனம்

(சென்னை)

அரசியல் ரீதியாக விமர்சனம் செய்வதற்குப் பதிலாக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியைத் த்னிப்பட்ட முறையில் தரக்குறைவாக முதலமைச்சர் ஜெயலலிதா விமர்சித்துவருவதை தேர்தல் ஆணையம் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஜீ.கே.லாசன் தெரிவித்திருக்கின்றார்.

முதலமைச்சர் வகிக்கும் பதவிக்கு எந்த வகையிலும் பொருந்தாத இத்தகைய விமர்சனங்களை நாகரிக அரசியலில் நம்பிக்கையுள்ள மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்று நேற்று முன் தினம் ஜீ.கே.லாசன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## அ.தி.மு.கவின் பொய்ப் பிரசாரத்துக்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

இந்தியாவில் பிறந்தவர்கள் தான்



பிரதமராக வரவேண்டும் என்பதற்கான சட்டம் கொண்டு வரப்படுமென்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல் திட்டத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை யென்றும,அப்படிப்பட்ட செயல் திட்டமெதிலும் தான் கையெழுத்துப் போடவில்லை என்றும் தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளகளிடம் பேசிய அவரிடம், இத்தகைய சட்டம் வருங்காலத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் தி.மு.கவின் நிலை என்ன என்று கேட்டதற்கு அது பற்றிவரும் போது யோசிக்கலாம் என்று பதிலளித்தார் கருணாநிதி.

அ.தி.மு.க.பாராளுமன்ற உறுப்பினர்கள் கூற்றுப்படி வரும் மக்களவைத் தேர்தலில் தி.மு.க.வின் சார்பில் போட்டியிட விரும்புவோரிடம் 60இலட்சம் ரூபா கேட்கப்படவும் இல்லை,அவர்கள் செலுத்தவும் இல்லை என்பதால் அதைதிருப்பித தருவது என்ற பிரச்சினைக்கே இடம்இல்லை என்று கருணாநிதி கூறினார்.

தேர்தல் ஆணையத்திடம் அ.இ. அ.தி.முக.அளித்துள்ள புகாரில் கடுகளவும் உண்மையில்லை எனவும் அவர் கூறினார். (து)

## தேர்தலில் காங்கிரசுக்குப் படுதோல்வி:அத்வானி ஆரூடம்

தீவிரவாதிகள் வன்முறையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணையவேண்டும் என்று துணைப் பிரதமர் அத்வானி கோரிக்கை விடுத்துள்ளார்.

"பாரத் உதய" ரதயாத்திரையை மேற்கொண்டுள்ள அவர், ஆந்திரா மாநிலத்தில் நக்சலைட்டுக்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

துப்பாக்கி குண்டுகளை வாக்குச்சீட்டுகள் மூலம் முறியடிக்குமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டார்.

ஜனநாயகத்தில் வன்முறைக்கு இடமில்லை என்பதில் இந்தியா உறுதியாகஇருப்பதால் தான் உலக அரங்கில் நன்மதிப்பை ஈட்டியுள்ளதாக அத்வானி குறிப்பிட்டார்.

ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகளோடு தேசிய ஜனநாயக கூடடணி அரசு பேச்சுவார்த்தைகள் நடத்துவதன மூலம் வன்முறைகளைத் தடுத்துவருவதாக கூறிய அவர், அங்கு வெற்றிகரமாக தேர்தல்களை நடத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மின்சாரம்,சாலை,குடிநீர் ஆகியவற்றிற்கும் வாஜ்பாய் அரசு முன்னுரிமையளித்துவருவதாகத் தெரிவித்த அத்வானி விவசாயிகள் மத்தியில்லுள்ள பிரச்சினைகளை களைய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

வரும் தேர்தலில் காங்கிரஸ்கட்சியால் மூன்றில் ஒருபங்கு இடங்களைக் கூட கைப்பற்ற முடியாது என்றும் அதற்கு எதிர் காலம் இல்லை என்றும் அவர் கூறினார். (து)

**இந்தியச் செய்திகள்**



மக்களவைத்தேர்தல் குறித்த அனைத்து புள்ளி விபரங்களும் அடங்கிய சிடி.யை புதுடில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டார். உடன் தேர்தல் ஆணையர்கள் பி.பி.டாணடன மற்றும் என்.கோபாலசாமி.

# கூட்டமைப்பு ஆட்சியமைத்தால் அச்சமின்றி முஸ்லிம்கள் வாழலாம்

## ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைத்ததும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு எதுவித அச்சுறுத்தலாயினும் ஏற்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்டி மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது நாட்டில் கொடிய யுத்தம் ஒன்று நிலவியது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் இவ் ஆறரை வருட ஆட்சிக்காலத்தில் ஆறு வருடங்கள் நாடு யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

அண்மைக்காலமாக விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் அதேவேளை, யுத்தமொன்றுக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளிலும ஈடுபட்டு வருகின்றனர். யுத்த காலத்தில் கிழக்குப் பிராந்திய முஸ்லிம்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது. ஆயினும், பாரிய அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் எம்மாலான தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், உடத்தலவின்னவில் படுகொலைகளும் இடம்பெற்றன. இவ்வாறான பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் காப்பது எமது கடமை. கூட்டமைப்பு ஆட்சியமைத்ததும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினதும் உரிமைகளும் உயிர்களும் பாதுகாக்கப்படும். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டார். (உ-61,18)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பிரதேச ரீதியில் விழிப்புக் குழுக்கள்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்து வதற்கு பிரதேச செயலக மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் விழிப்புக்குழுககளை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை உள்துறை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது என அமைச்சின் செயலாளர் எம். என்.யுனைட் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள 240 பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரதேச செயலாளர்களைத் தலைவராகவும், மதப்பெரியார்கள், கல்விமான்கள் மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளை உறுப்பினர்களாகவும கொண்டு இந்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தேசிய மட்ட விழிப்புக்குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அண்மையில் ஏற்படுத்தப்பட்டமை தெரிந்ததே. இங்குழுவின் செயற்பாடுகளை விஷ்தரிக்கும் வகையிலேயே தற்போது பிரதேச மட்டத்தில் விழிப்புக்குழுககள் அமைக்கப்படவுள்ளன.

குறறச்செயல்கள்தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏறபடுத்தி குற்றங்களைக் கட்டுப படுதது வதற்கான நடவடிக்கைகளை யும், இப்பிரதேச மட்ட விழிப்புக் குழுக்கள் மேற்கொள்ளவுள்ளன.

இநத விழிப்புக் குழுக்களினால் முன்வைக்கப்படும்ஆலோசனைகளை அடிபபடையாகக் கொண்டு தேசிய மட்டக் கொள்கை யொன்றை வகுப்பதற்கும் உள்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது.இந்த நடவடிக்கைகள் மூலம் நாட் டில் அதிகரித்துவரும் குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்தலாமென அமைச்சு எதிர்பார்ப்பதாகஅதன் செயலாளர் யுனைட் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

## சிலுவைகள் சேதம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நாச்சிக்குடாவில் அமைக்கபட்டிருந்த 12 பாரிய சிலுவைகளில் 9 சிலுவைகள் இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து சீனன குடா பொலிஸார் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (வ)

# சூனியப் பிரதேசத்தில் உள்ள மட்டு. மக்கள் வாக்களிக்க வசதியாக படைத்தரப்புடன் உடன்படிக்கை

(மட்டக்களப்பு)

மட்டககளப்பு மாவடடத்திலுள்ள சூனியப் பிரசேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தெடர்பாக படைத்தரப்பு அதிகாரிகளுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மொனகுருசாமிக்கும் இடையில் உடன்படிக்கையொனறு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது வ்டயம்தொடர்பாக நேற்று முன்தினம் காலை படைத்தரப்பு அதிகாரிகளுக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் சுமார் 3 மணி நேரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியிலேயே இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மொனகுருசாமி கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள், படையினரின் சோதனைச் சாவடிகளூடாகச் சென்று வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்களிக்கச் செல்லும் போது சோதனை நிலையங்களில் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொள்ளாமல் உடனடியாகவே வாக்களிப்புக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. இது விடயம் குறித்து உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அத்துடன், இச் செயற்பாடுகளில் ஏதேனும் சிரமங்கள், சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில், மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் இரத்துச் செய்யப்படமாட்டாது. ஆயினும் இது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் அம் மக்களின் வாக்குரிமை பயன்படத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்கபட்டுளளன எனக் குறிப்பிட்டார். (உ-18)

# மீளக் குடியமர்ந்த குடும்பத்துக்கு மிரட்டல் விடுக்கும் படைத்தரப்பு

## ம.உ.ஆ.குழுவிலும் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இரவு நேரங்களில் வீட்டில் தங்கக் கூடாது என தன்குடும்பத்தைப்படையினர் மிரட்டி வருவதாக குடும்பஸ்தர் ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தெல்லிப்பழை பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராஜா என்பவரே இம் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தெல்லிப்பழை பண்ணாகம் பகுதியில் படையினரால் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள தமது சொந்த வீட்டில் எனது குடும்பத்தினர் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

படையினரின் அறிவித்தல்களுக்கு அமைவாகவே அங்கு நாம் மீளக் குடியமர்ந்த போதும், இரவு நேரங்களில் அங்கு தங்கக்கூடாது என படையினர் மிரட்டிவருவது எமது வாழ்வுரிமையை மீறும் செயல் என மேலும் அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-19)

---

# பொன் அணிகள் போர் புனித பத்திரிசியார் வெற்றி

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையில், வட்டுக்கோட்டை யாழ்பபாணக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற 50 ஓவர்கள் கொண்ட பொன் அணிகள் போரில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி 5 விக்கெற்றினால் வெற்றி பெற்றுள்ளது.

முதன் முறையாக யாழ்.மண்ணில் மூன்றாவது மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற இப்போட்டிக்காக மைதானத்தைச் சூழவும் வீடியோக் கமராக்கள் பொருத்தப்பட்டதுடன், மூன்றாவது மத்தியஸ்தர் இப்போட்டி யினை தொலைக் காட்சி மூலம் அவதானித்தமை குறிப்பிடத்தக்கது.

ராஜன் கதிர்காமர் வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்ற இப் போட்டியானது சர்வதேச தரத்தில் நடைபெறும் ஒருநாள் போட்டியினைப் போலவே காட்சியளித்தது.

இரு பாடசாலைகளினதும் அதிபர்களின் கொடியேற்றத்துடன் இபபோட்டி ஆரம்பமானது. அதன் பின்னர் நாணயச் சூழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக்கல்லூரி அணித் தலைவர் நிறோசன் தமது அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி, துடுபெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 37.4 ஓவர்களில சகல விக்கெற்றுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பில் துடுப்பாட்டத்தில் திலீபன் 23 ஓட்டங்களையும், செந் தூரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் சுஜந்தன் 3 விக்கெற்றுக்களையும், சுரேன், சஜீவன் ஆகியோர் தலா இரு விக்கெற்றினையும், லொயிட், வினோதன் ஆகிய இருவரும் ஒரு விக்கெற்றினையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பத்திரிசியார் கல்லூரி 23.4 ஓவர் களில் 5 விக்கெற்றினை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று இலகு வாக வெற்றி பெற்றது. துடுப்பாட்டத் தில் சுஜீவன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், நிசாந்தன் ஆட்ட மிழக்காமல் 15 ஓட்டங்களையும், வினோதன 23 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் தனுஜன் 3 விக்கெற்றினையும், திலீபன், தனாதரன் ஆகி யோர் தலா ஒரு விச் கெற்றினை வீழ்த் தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சுஜீவன் தெரிவு செய்யப்பட்டார். (உ-121)

# பலம் வாய்ந்த நிலையில் நியூஸிலாந்து அணி

தெனனாபிரிக்க அணிக்கெதிராக ஒக்லாண்டில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் நியூஸிலாந்து அணி பலம் வாய்ந்த நிலையில் உள்ளது. தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 296 ஓட்டங்களைட் பெற்றது.

பதிலுக்குத்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவின் போது 8 விக்கெற்றை இழந்து 584 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன்படி தென்னாபிரிக்க அணியை விட 288 ஓட்டங்கள் முன்னிலையில் நியூஸிலாநது அணி திகழ்கின்றது. நியூஸிலாந்து அணி சார்பாக நேற்றைய போட்டியின் போது திறமையாகத்துடுப்பெடுத்தாடிய கிறிஸ் கெய்ன்ஸ் 150 ஓட்டங்களையும, ஜேக்கப் ஓரம்90 ஓட்டங்களையும் பெற்றனர். இவ்விருவரும் 7 வது விக்கெற்றுக்காக இணைந்து 255 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தமை நேற்றைய போட்டியின் சிறப்பம்சமாகும். (உ-121)

# தோல்வியின் விளிம்பில் மேற்கிந்திய தீவுகள் அணி

இங்கிலாந்துக்கெதிராக முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் படுதோல்வியடைந்த மேற்கிந்திய தீவுகள் அணி, இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியிலும் பிரகாசிக்கத்தவறியுள்ளது. ரின்டாட் குயின்ஸ் பாக் ஓலலி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹாமிசன் 48 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார்.

இதன் காரணமாக மேற்கிந்திய தவுகள் அணி அதன் முதலாவது இனிங்ஸில் 8 விக்கெற்றுக்களை இழந்து 189ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஒரு கட்டத்தில் விக்கெற் இழபபின்றி 100 ஓட்டங்களைப் பெற்றிருநத மேற்கிந்திய தீவுகள் அணி 65 ஓட்ட இடைவெளியில் 8 விக்கெற்றுக்களை இழந்து.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ்கையில 62 ஓட்டங்களையும், டெவன் ஸ்மித் 35 ஓட்டங்களையும் பெறறு அணியின் வெற்றிக்கு சிறப்பான அத்திவாரத்தை இட்டனர். (உ-121)

## விளையாட்டுச் செய்திகள்

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(செம்பியன்பற்று)

வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**மென்பந்துத் துடுப்பாட்டம்**

1ஆம் இடம்-சென் அன்ரனிஸ் வி.க (தாளையடி)

2ஆம் இடம் செல்வா விக(குடத்தனை)

**கரபந்து (ஆண்)**

1ஆம் இடம்- அருணோதயா வி.க (ஆழியவளை)

2ஆம் இடம்- வெண்மதி வி.க (நாகர்கோவில்)

**கரபந்து (பெண்)**

1ஆம் இடம்- அன்ரனிஸ்விக (தாளையடி)

2ஆம் இடம் - செம்பியன் வி.க (செம்பியன்பற்று தெற்கு)

**வலைப்பந்து**

1ஆம் இடம் - சென் அன்ரனிஸ் வி.க (தாளையடி)

2ஆம் இடம் - செம்பியன் வி.க (செம்பியன்பற்று தெற்கு)

**எல்லே (ஆண்)**

1ஆம் இடம் வெண்மதி வி.க (நாகர் கோவில்)

2ஆம் இடம் சென் அன்ரனிஸ் விக (தாளையடி)

**எல்லே (பெண்)**

1ஆம் இடம் - சென்பிலிப் நேரிஸ் வி.க. (செம்பியன்பற்று)

2ஆம இடமகலைமகள்விக (மாமுனை)

**கபடி (ஆண்)**

1ஆம் இடம்சென்பீற்றர் விக (குடத்தனை)

2ஆம் இடம்செல்வா விக (குடத்தனை)

**கபடி (பெண்)**

1ஆம் இடம்செல்வா விக (குடத்தனை)

2ஆம் இடம் சென்பிலிப் நேரிஸ் வி.க (செம்பியன்பற்று). (உ-42)

# ஹொக்கிப் போட்டியில் போலந்து சம்பியன்

மாட்ரிட்டில் நடைபெற்ற ஒலிம்பக் தகுதி காண் ஹொக்கிப் போட்டியில் போலநது முதலிடத்தைப் பெற்றது.

இறுதி ஆட்டத்தில் போலந்து 2-1 என்ற கோல் கணக்கில் போட்டியை நடத்திய ஸ்பெயினைத் தோற்கடித்தது. ஆட்டநேரத்தில் இரு அணிகளும் தலா ஒருகோல் அடித்து சமன் பெற்றிருந்தன. கூடுதல் நேரத்தில் ரொனால்டு பிருவர்ஸின் அற்புதமான கோல், ஒலிம்பிக் சாம்பியன் போலந்தின் வெற்றிக்கு உதவியது.

முதல் அரைநேர ஆட்டத்தில் ஸ்பெயின் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் பங்கேற்ற அணிகளின் நிலை 1.போலந்து, 2.ஸ்பெயின், 3. பாகிஸ்தான், 4. இந்தியா, 5.கிரேட் பிரிட்டன். 6.நியூஸிலாந்து, 7.தென்னாபிரிக்கா, 8.பெல்ஜியம், 9.போலந்து, 10. மலேசியா, 11.கனடா, 12. ஜப்பான். முதல் 7 இடங்ளைப் பெற்ற அணிகள் ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளன. (தி-121)

# அப்பப்பா! இந்திய அணிக்கு இத்தனை பாதுகாப்பா?

உலகம் முழுமையையும் உற்றுநோக்க வைத்திருக்கும் இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெற் தொடரானது பல வேறு சவால்கள், சாதனைகள் மத்தியில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடர் கிரிக்கெற் பந்தயம் தான் என்றாலும் இதன் பின்னணியில் அடங்கியுள்ள செய்தி வேறு. இது வெறும் கிரிக்கெற் ஆட்டம் மட்டுமல்ல இரு தேசங்களின் கௌரவப் பிரச்சினை.



இந்திய கிரிக்கெற் அணியின் பாதுகாப்பிற்கு பாகிஸ்தான் அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் 2002இல் எல்லையில் படைகளைக் குவித்தபோது சரி கார்க்கில் யுத்தத்தின் போதும் சரி, இந்த அளவு பதற்றமோ எதிர்பார்ப்போ நிலவவில்லை. 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியக் கிரிக்கெற் அணி பாகிஸ்தானில் ஒரு முழு நீளத் தொடரில் விளையாடி வருகின்றன. இறுதி நெருங்கநெருங்க இரு நாட்டைச் சேர்ந்தவர்களும் படபடப்போடு காத்திருக்கின்றார்கள்.

## ஆட்டம் கொண்டாட்டம்

இந்தியாவைப் போலவே பாகிஸ்தானிலும் கிரிக்கெற் ஆட்டம் எல்லோராலும் ஆராதிக்கப்படும் ஒரு விடயமாகவுள்ளது. தற்போது இளைஞர்களாக இருக்கும் ஒரு தலைமுறை இந்த இருநாடுகளுக்கும் இடையிலான அனல் பறக்கும் ஆட்டத்தை நேரில் பார்க்க முடியாதபோதும் இதைப் பற்றியே பேசுகிறார்கள், சிந்திக்கிறார்கள்.
இந்த பரவசமானது எல்லோ எங்கும் தொற்றி வருகிறது. [illegible]கள், தெருக்கள், வீடுகள் எங்கும் இதே பேச்சு. ஒவ்வொருவரது சிந்தனையிலும் கிரிக்கெற் ஆக்கிரமிப்பு,

இந்திய - பாகிஸ்தான் வீரர்களுக்கு செய்யப் பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இதுவரை விளையாட்டு உலகம் காணாத அளவுக்கு பெருமெடுப்பில் இருக்கும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரமீஸ் ராஜா சொல்லும் அளவுக்கு பாதுகாப்புப் பற்றிய கவலை இரு தரப்பிலும் நிலவுகிறது. இத்தனைக்கும் அச்சுறுத்தல், மிரட்டல் ஏதும் இருப்பதாக பாகிஸ்தான் அரசுக்கோ, இந்திய அரசுக்கோ, கிரிக்கெற் சபைகளுக்கோ தகவல் ஏதும் இதுவரை வரவில்லை. எதையும் குறிப்பாக எதிர்பார்த்து அல்லது எதிர் பாராத விபரீதம் நடந்து விடக்கூடாது என்றே இந்த ஏற்பாடுகள் செய்யப பட்டிருக்கின்றன என்று கூறுகிறார் ரமீஸ் ராஜா.

## உடைக்க முடியாத பாதுகாப்பு வியூகம்

இரண்டு அணியினரின் பாதுகாப்பும் மூன்று அடுக்குகள் கொண்டதாக இருக்கும். முதல் அடுக்கில் உள்துறை அமைச்சின் கீழ் இருக்கும் தேசியப் பாதுகாப்புப் படையினர் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு வழங்கும் பாதுகாப்பை 24 மணி நேரமும் வீரர்களுக்கும், அவர்களுடன் வருபவர்களுக்கும் வழங்குவார்கள். இந்தச் சுற்றுப் பயணத்திற்காக அமைச்சகத்தின் அதிகாரிகள் மூன்று பேர் முழுநேரப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பிரிவு விளையாட்டு அணியினருடனேயே பயணம் செய்யும். முதல் மட்டக்குழுவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் இரண்டாம் மட்டக்குழுவுடன் தொடர்புபட்டதாக இருக்கும். இரண்டாவது அணிக்கு பொலிஸ் பிராந்தியத் தலைவர்கள், மாநகர காவல் துறை தலைவர்கள், பாரா மிலிட்டரி ரேஞ்சர்ஸ் போர்ஸ்சின் இயக்குநர் ஜெனரல்கள் இதற்குப் பொறுப்பேற்பார்கள் இந்த இரு பிரிவுகளுக்கும் அணியுடன் வரும் பிசிபி சிறப்பு கொமிற்றி தொடர்ச்சியாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்.
ஜனாதிபதிக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் போல சிவில் உடையிலும் சீருடையிலும் இருக்கும் பாதுகாப்புப் படையினர் அணியினருடன் குண்டு துளைக்காத பஸ்சில் பயணம் செய்வதோடு, வீரர்கள் தங்கும் ஹோட்டல் களிலும் நிறுத்தப்படுவார்கள்.

## படைகள் சூழ பயணம்

அணி கடந்து செல்லும் பாதைகளில் போக்குவரத்துத் தடைசெய்யப்படும் பாதைகளில் உயரமான கட்டடங்களின் மீது திறன்மிக்க துப்பாக்கி வீரர்கள் நிறுத்தப்படுவார்கள். அணியினர் பணிக்கும் பேருந்து பாதுகாப்பு வாகனங்கள் படைசூழ நகர்ந்து செல்லும். போட்டி நடக்கும் மைதானமும் பாதுகாப்பு அதிகாரிகளினால் கண் காணிக்கப்படும். பார்வை யாளர்கள் அதிதீவிரமான பரிசோதனைக்குப் பிறகே மைதானத்திற்குள் அனு மதிக்கப்படுவார்கள்.
இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் அமர்ந்து பலநாள் விவாதித்து பல உறுதி மொழிகளையும் பெற்றுக்கொண்ட பின்பே போட்டிகளின் கால அட்ட வணை முடிவு செய்யப்பட்டது. பெஷாவர், கராய்ச்சி ஆகிய இரண்டு நகரங்கள் தான் பாதுகாப்புப் படையினரின் கவனத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்த இடங் களில் டெஸ்ட் போட்டிகள் நடத்தவேண்டுமென்பதில் பாகிஸ்தான் கிரிகெற் சபை விடாப்பிடியாக நின்றது. ஒரு டெஸ்ட் ஆட்டத்திற்காக ஒருவாரம் வீரர்கள் கராய்ச் சியில் தங்க வேண்டும் என் பதை இந்திய அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை. பல்வேறு இந்தியப் பிரதிகள் சமீபகாலமாக காராய்ச்சிக்குச் சென்று திரும்பியிருக்கி றார்கள். விரும்பத் தாகாத எந்தவொரு நிகழ்வும் அப் போது ஏற்படவில்லை என பாகிஸ்தான் அதிகாரிகள் வாதிட்டனர். முடிவாக டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக ஒரு நாள் போட்டி நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. போட்டிகள் பகலிலேயே நடத்தி முடிக்கவேண்டும் என நிபந்தனை விதித்தது இந்தியா.

## இந்திய அரசின் சந்தேகம் மறைந்தது

இங்கிய அணியினருக்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவதில் பாகிஸ்தான் அரசுக்கு இருக்கும் திறமை பற்றி ஆரம்பத்தில் இந்திய அரசுக்கு சிறு சந்தேகம் இருந்தது. அனால், இந்தியத் தரப்பின் சிறு சந்தேகத் திற்கும் கவலைக்கும் பாகிஸ்தான் தரப்பினர் கொடுத்த கவனமும் பதிலும் அவர்களது சந்தேகத்தைப்



போக்கியது. தேவைப்பட்டால் பாகிஸ்தான் இராணுவத் தையும் பயன்படுத்தலாம் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி முஷாரப் நேரடியாகவே உத்தரவிட் டார். போட்டிகள் நடக்கும் இடங்களில் பாகிஸ்தான் அரசு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு களைச் செய்துள்ளது.

- **உள்பாதுகாப்பு** ~ ஆட்டம் நடக்கும் எல்லா மைதானங்களைச் சுற்றியும் இரும்புத் தடுப்புகள் நிறுவப்படும். பார்வையாளர் கள் எங்கேயிருந்தும் வீரர் களை நெருங்க முடியாது. இது போக பாதுகாப்புப் படையினர் மைதானத்தைச் சுற்றியும் நிறுத்தப்படுவார்கள். உணவு உட்பட பார்வை யாளர்கள் எதையும் உள்ளே கொண்டு செல்ல முடியாது.
- **வெளிப்பாதுகாப்பு** ~ ஒவ் வொரு விளையாட்டு அரங் கத்தைச் சுற்றியும், பலத்த பொலிஸ் காவல் எல்லா நுழைவாயில்களிலும் அதிதீவிர பரிசோதனைக் கருவிகள் பொறுத்தப்பட்டு பார்வையாளர்கள் உள்ளே அனுப்பப்படுவார்கள். குறிப் பாக வெளிநாட்டுத் தலை வர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு இந்திய கிரிக்கெற் வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

**சாலைத் தடுப்புக்கள்**~ வீரர்கள் பயணிக்கும் பஸ் மைதானத்திற்கு கிளம்புவ தற்கு பல மணி நேரத்துக்கு முன்பே அவர்கள் வரும் சாலை களும், சந்திகளும் மூடப்படும்.

**பாதுகாப்பு வாகனங்கள்** ~ இந்திய அணி செல்லும் பஸ்ஸில் முன்னும் பின்னும் இடமும் வலமுமாக இந்த வாகனங்கள் செல்லும். கிட்டத்தட்ட 18 வாகனங்கள் வரை அணிவகுத்துச் செல்லும்.

**ஹோட்டல்** ~ தீவிர பரிசோ தனைக்குப் பின்பே யாரும் உள்ளே நுழைய முடியும். வந்து செல்பவர்கள் ஏகப் பட்ட பரிசோதனைகளையும் பாதுகாப்பு அரண்களையும் தாண்டிச் செல்லவேண்டும்.

**விமானப் பயணம்** ~ எல்லா இடங்களுக்கும் இந்திய அணி விமானத்திலேயே சென்று வரும் சாலைப் பயணத்தைக் குறைப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அவர்கள் விமானத்தை விட்டு இறங்கிய உடனேயே பாதுகாப்புப் படை அவர்களை சூழ்ந்து கொள்ளும்.

**உடைமாற்றும் ஃ ஓய்வு அறை**~ அணியினரையும், முக்கிய அதிகாரிகளையும் தவிர யாரும் உள்ளே நுழைய முடியாது.

**துப்பாக்கி வீரர்கள்** ~ மைதா னத்திற்கு அருகில் இருக்கும் உயரமான கட்டடங்களில் காவல்துறையினர் நிறுத்தப் படுவார்கள். ஆயத்த நிலையில் துப்பாக்கி சுடும் வீரர்களும் நிற்பார்கள்.



## இந்திய வீரர்களுக்கு இந்தப் பாதுகாப்பு ஏன்

இப்படியாக எந்த கிரிக்கெற் வீரர்களுக்கும் இந்தளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இந்திய அணியானது 15 வருடங் களுக்குப் பிறகு பாகிஸ்தான் விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிரிக்கெற் தொடர் குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் உல் - ஹக் இத்த தொடரை, தொடர்களின் தாய் என்று பெயர் சூட்டி மகிழ்கிறார். எதிரணியின் மன உறுதியை சிதைப்பதில் வல்லவரான பாகிஸ்தான் அணியின் பயிற்றுநர் ஜாவிட் மியாண்டட், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்.:பான் பதானை பாகிஸ்தான் அளவு கோலின் படி பார்த்தால் தெருவோரத் தில் விளையாடுபவரைப் போல தான் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார். இந்திய அணியின் கப்டன் கங்குலி இதற்கு கோபப்பட வில்லை. ஆனால் கங்குலி சும்மா இருப்பாரா? அவரும் தற்போது ஒரு சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார். பாகிஸ் தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் அக்தர் பந்தை எறிகிறாரென சொல்லியி ருக்கிறார். இந்த வாய்ப் பேச்சானது எரிகிற தீயில் எண்ணெய்யை ஊற்றிவிடும் செயலாக அமைந்துள்ளது.

தொகுப்பு:நோயல்

## தடம் பதிப்பதில் திட நம்பிக்கை

இந்திய அணிக்குள் ஒரு திடநம்பிக்கை உருவாகி யிருக்கிறது. பாகிஸ்தான் அணியை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்த இந்தியாவிற்கு பெரிய வாய்ப்பு இருக்கிறது என்கி றார். கடசியாக இந்திய அணி பாகிஸ்தானுக்கு சென்ற போது தலைவராக இருந்த ஸ்ரீகாந் அத்துடன் முன்னாள் தலைவரான அஜித் பெடேகர் இந்தியா வுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான வெற்றி வாய்ப்பு 55:45 என்ற விகிதத்தில் இருப் பதாக சொல்லியிருக்கிறார். இப்படி இருக்கையில் இரு அணி க்கும் இடையிலான 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் இது வரை கடந்த 3 போட்டி களில் இரண்டில் பாகிஸ் தான் அணியும் ஒரு போட் டியில் இந்திய அணியும் வெற்றி பெற்றுள்ளன. இது வரை நடைபெற்ற 3 போட்டி களில் 2 அணிகளினதும் பந்துவீச்சானது படுமோச மாக அமைந்துள்ளது. முதல் இருபோட்டிகளிலும் இரு அணிகளும் 300 வெற்றி இலக்கைத் தாண்டி வெற்றிக்காகப் போராடியமை குறிப்பிடத்தக்கது. 4 வது போட்டி இன்று நடைபெற வுள்ளது. இந்தப் போட்டி யானது இந்திய அணிக்கு மிக முக்கியமான போட்டி யாக அமைந்துள்ளது. இந் தப் போட்டியில் இந்திய அணி தோற்றால் பாகிஸ்தான் அணி தொடரை வென்று விடும் என்ற நிலைப்பாடு உள்ளது. இந்தப் போட்டியானது சவாலான போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் விளையாடும் இந்திய அணி தொடரை வெல்லுமா? அல்லது மண்கவ்வுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். □

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

79

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

### 1.மட்டக்களப்பு தேசம்

குடிப்பிரிவுகள்

**1.முக்குவக் குடிகள்**

1.வில்லவராசன் குடி,2. பணிக்கனார் குடி, 3) சட்டிலான் குடி, 4, தனஞ்சயன் குடி, 5) மாளவன் குடி,6) சங்கு பயத்தன் குடி, 7) கச்சிலாகுடி

**2. வெள்ளாளக்குடிகள்**

1) கண்டன் குடி 2) சருகுபில்லி குடி 3) கட்டப்பத்தன் குடி 4) கவுத்தவாகு குடி 5) அத்தியாயன் குடி 6) பொன்னாச்சி குடி 7) வயித்திகுடி

**3. செட்டி குடிகள்**

1)மங்குச்செட்டி 2)மாணிக்கச்செட்டி 3) சங்குச்செட்டி 4) சதாசிவச் செட்டி 5) சிங்கச்செட்டி 6) சின்னவச்செட்டி 7)பங்குச்செட்டி

**4. சிங்களக்குடிகள்**

1)கல்மடுமுதலி 2)மீகான்கோடை 3) அவுறாளை 4) மேலச்சேனை 5) பள்ளச்சேனை 6) பெரிய கல்மடு முதலி 7) மூவாங்கல்லு

**5. கரையார் குடிகள்**

1)கரையூரார் குடி 2) கம்பிளியார் குடி 3) முதலித்தேவன் குடி 4) வைத்திகுடி 5) வேலன் குடி 6) வங்காளன் குடி 7)வீரமாணிக்கன் குடி

**6. சீர்பாதக்குடிகள்**

1)சிந்தாத்திரயன் குடி 2)காலதேவன் குடி 3)காங்கேயன்குடி 4)வேளாலிகுடி 5) வீரு கண்டன் குடி 6)நரையாவி குடி 7)பொட்டப்பறைச்சிகுடி.

**7. பண்டாரப்பிள்ளைகள்குடிகள்**

1)தேசத்துப் பண்டாரப்பிள்ளை 2)கல்லைதூக்கி பண்டாரப்பிள்ளை 3) பறைதூக்கி பண்டாரப்பிள்ளை 4) தீவட்டிப்பண்டாரப்பிள்ளை 5)கொடிதூக்கி பண்டாரப்பிள்ளை 6)குருத்துக்கட்டி பண்டாரப்பிள்ளை 7)வீதிஅலங்கார பண்டாரப்பிள்ளை.

**8. கம்மாளர் குடிகள்**

1)அடப்பன் குடி 2)ஆனந்தி குடி 3) சும்மாடு குடி 4)கட்டாடிப் பதஞ்சலியார் குடி 5) வீரிய வேளான் குடி 6)வேலன்குடி 7)ஆட்டுவள்ளி குடி.

**9. சாண்டார் குடிகள்**

1.களுவத்தை பணிக்கன் குடி 2)வேலைப்பணிக்கன்குடி 3)கறுத்தக்கண்ணிகுடி 4)பத்தனாச்சிகுடி 5)கருப்பட்டி நாச்சி குடி 6)குசவன் குடி 7)பாலன்குட்டி குடி.

**10.நாவிதர் குடிகள்**

1)மண்முனை 2)மகிழடித்தீவு 3)சவளக்கடை 4)பாலமுனை,5)வழல்வாய், 6)சம்மாந்துறை 7) வலையிறவு.

**11.வண்ணார்குடிகள்**

1)தாளங்குடா வண்ணார் 2) மண்முணை வண்ணார் 3) முதலிக்குடா வண்ணார் 4)பாவாடை வண்ணார் 5)சலவை வண்ணார் 6) மீயாங்கொடை வண்ணார்.

**12. பறையர்குடிகள்**

1)வள்ளுவன் குடி 2) தொட்டிகுடி 3)தோட்டிகுடி 4) சங்கிலியன்குடி 5) வெட்டியான் குடி

குடிகளை அடிப்படையாகக்கொண்ட சமூக அமைப்பு தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவானதாகும். குடி ஒவ்வொன்றும் வகுத்துவார், கத்தறை, கந்தாயம், என்ற உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும் .மேல்வரும் குடிப்பெயர்கள் தழிழரிடையிலும் முஸ்லிங்களிடையிலும், காணப்படுபவை.

1. பொன்னாச்சிகுடி 2. மூத்தாச்சிகுடி 3. இளையநாச்சிகுடி 4. வரிசை நாச்சிக்குடி 5. உலகிப்போடி குடி 6. படையாண்டகுடி 7. பெத்தாண்டகுடி 8. பணிக்கனாகுடி 9.வடக்கணா குடி 10. கச்சியான் குடி 11. கோப்பிகுடி 12.செட்டிகுடி 13 கலிங்கனார்குடி 14. உசவீடுகுடி15. ராசம்பிள்ளை குடி 16. சின்னக்கதிரன்குடி.

மேல்வரும் குடிப்பெயர்கள் முஸ்லிங்களின் மத்தியில் காணப்பட்டவை:

1.வெள்ளரசன் குடி 2. ஆலங்குடி 3.ஓடாவி குடி 4. மண்ணைப்போடி குடி 5.தச்சனார்குடி 5.சங்கதி குடி 7 மாமனார் பிள்ளை குடி 8.சங்கரப்பத்தன் குடி 9. சேனைக்குடி 10 களனி குடி 11 வட்டுக்கத்தற குடி 12. ஓஸ்கட்டன் குடி 13. வெற்றிசிங்க ஆராய்ச்சி குடி 14. பணியீட்டுக் குடி 15. சம்மான் ஓட்டி குடி.

வெவ்வேறு சாதியினருக்கு வெவ்வேறு தெய்வங்கள் சிறப்பாக உரியனவென்று கொள்வதும் வழமை. சாதித் தெய்வக் கல்வெட்டு மேல்வருமாறு உள்ளது.

"உழவருக்குச் சிவனாம் உடுக்கு மாரியம்மன்
நழவருக்கு வயிரவனாம் நாடார்க்குக் கண்ணகையாம்
தொழுவருக்குப் பிதுராம் தொண்டருக்கு வேலவனாம்
மழுவருக்கு வீரபத்திரன் மறையோர்க்கு நான்முகனே
வேந்தர்க்கு மாலாம் வேடருக்குக் கன்னிகளாம்
ஏந்து பணி செய்வோர்க்குக் காளியாம்...."

**சமூக வழமைகள்**

ஒரு பெண் கர்ப்பவதியாகவிருக்கும் காலத்தில் அவளுடைய கணவன் சவரஞ் செய்வதைத் தவிர்த்துத் தனது தலை மயிரையும் தாடியினையும் நீளமாக வளர்ப்பதுண்டு. இந்த வழக்கம் வைதீகப்போக்குடைய சைவரிடையிலே, குறிப்பாகக் கிராமப்புறங்களில் நிலவி வந்துள்ளது. அத்தகைய பெண்ணைத் தையல் வேலையிலும் சித்திர வேலைப்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு அனுமதிப்பதில்லை. அவள் அவற்றிலே ஈடுபட்டாற் கர்ப்பத்திலே தங்கியிருக்கும் சிசுவிற்கு அங்கவீனம் ஏற்படக்கூடும் என்பது ஒரு நம்பிக்கை. பகல் நித்திரை,அவள் தனது கையால் உப்பினைப் பிறருக்குக்கொடுத்தல், ஆலயதரிசனம், குடியிருக்கும் இடத்தில் வீடு, கட்டிடம் என்பவற்றை அமைத்தல், புனரமைத்தல் ஆகிய கருமங்கள் கர்ப்பிணிப்பெண்களுக்கு விலக்கானவை.

பிள்ளை பிறந்த பின்பு ,வீட்டிலே தெளிவெண்ணெய் விளக்கு எரிப்பது வழக்கம். அதனாலே பேய் பிசாசுகள் அகன்று விடும் என்று நம்பினார்கள். அவற்றில் இருந்து தாயினையும் பிள்ளையினையும் பாதுகாப்பதற்காக வீட்டுக்கு முன்னால் விறகு கட்டைகளை எரிப்பார்கள். உண்மையில் அவை சுகாதார விருத்தியின் பொருட்டு செய்யப்படும் கருமங்களாகும். வேப்பிலை , வேப்பெண்ணெய், நெருப்பு ஆகியன கிருமி நாசினிகளாகும். பிள்ளை பிறந்தவுடனே உறவினருக்கும் சுற்றத்தவருக்கும் சர்க்கரை, கற்கண்டு ஆகியவற்றை வழங்குவது வழமை. பிள்ளை பிறந்த 31ஆம் நாள் அன்று துடக்குக்கழிவு என்ற பரிசுத்தச் சடங்கு சமயாசாரமாக நடைபெறும். அச்சமயத்திலே உறவினரையும் குடிமக்களையும் வீட்டுக்கு வரவழைத்து விருந்துபசாரம் செய்வதுண்டு. அத்தருணம் சோதிடர் ஒருவர் பிள்ளையின் சாதகக் குறிப்பை எழுதிக்கொண்டு வந்து சபையோர் முன் கிரகபலன்களைச் சொல்லுவார். (தொடரும்)

## இறுதித் தீர்மானம் எடுக்க 25ஆம் திகதிவரை அவகாசம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தேர்தல் பாதுகாப்புப் பணிகள் தொடர்பாக எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் இறுதித் தீர்மானத்துக்கு வரமுடியும் எனப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தேர்தல் பாதுகாப்புப் பணிகள் தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்கள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

ஆயினும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர்,பாதுகாப்புத் தரப்பினர்,போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள்,நிர்வாகத்துறை சார்ந்த சகல தரப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கின்றது என்று தெரிவித்துள்ளார். (உ-60,10)

## கச்சதீவு உற்சவம் இம்மாத இறுதியில்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திகல நாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது .

இக்கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை நெடுந்தீவு மற்றும் வேலணை உதவி அரசாங்க அதிபர்கள் நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் மற்றும் சுகாதாரத் திணைக்களம் பொலிஸ், கடற்படை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## திருமலை வேட்பாளர் தேர்தலில் இருந்து விலகல்

(திருகோணமலை)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட இருந்த நாகராஜா சாம்பவசிவமூர்த்தி என்ற வேட்பாளரே தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் சுகவீனம் காரணமாக தான் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை வேட்பாளர்களுள் ஒரே ஒரு தமிழ் வேட்பாளர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. (தி-62)

## முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் கடத்தப்பட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சம்மாந்துறையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசார பணிமனையில் கடமையாற்றும் கலிதீன் பனா(வயது-45) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணாமல் போயிருந்ததாகவும் புதன்கிழமை காலை 7 மணியளவில் சன நடமாட்டமற்ற இடத்தில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## மாணவர் நலன் கருதி முன்னேற்ற நிலையம்

(பொன்னாலை)

தென்னிந்தியத் திருச்சபை சாவல்காடு மற்றும் சுதுமலை வாழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில கொண்டு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வரு கின்றது.

"மாணவர் முன்னேற்ற நிலையம் என்ற அமைப்பை நிறுவி அதனூடாகவே இத்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன.

தென்னிந்தியத் திருச்சபை யின அதிவணக்கத்திற்குரியபேராயர் எஸ்.ஜெபநேசனின் ஏற்பாட்டில் இடம்பெறும் திட்டத்தில் சுமார் 450மாணவர்களுக்கு இலவசக் கல்வியூட்டல் மற்றும் சுற்றுலாக்கள்,தொழில்சார் பயிற்சிகள் என்பன வழங்கப்படுகின்றன.

இம்மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கென 14ஆசிரியர்களும் நியமிகக்கப்பட்டுள்ளனர். (உ-49)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை அருகிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தெடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

செல்லதுரை மணிவண்ணன் (கண்ணன்),டச்சுவீதி,சாவகச்சேரி.

கஸ்பார் மேரிஜரிஸ் ,5/1 1ம் ஒழுங்கை , ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி.

மாரிமுத்து கதிரவேலு, மோகனதாஸ் பாடசாலை அருகாமை மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

சொலமன் ஜெயம்மா மாவடிப் பிள்ளை யார் கோவிலடி, மீசாலை.

கதிர்காமு சின்னத்துரை, சர சாலை வடக்கு, சாவகச்சேரி.

அப்புத்துரை சரவணமுத்து, 6ம்கட்டை,தனங்கிளப்பு,சாவகச்சேரி.

வரதராசா பரிமளா தேவ்.மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

ரத்தினம் அன்னபூரணம், ஞான வைரவர் கோவிலடி, கண்டி வீதி நுணாவில்.

ஐயம்பிள்ளை சிவராசா, குடியேற்றத்திட்டம், மறவன்புலவு.

வல்லிபுரம் தங்கமலா,பள்ளிவாசல் அருகாமை ,தனங்கிளப்பு வீதி, சாவகசசேரி.

சண்முகம் நித்தியானத்தம் மறவன் புலவு.

மகேந்திரராசா மேரி எலிசபெத் 10ம்வட்டாரம் புதுக்குடியிருப்பு.

சுப்பிரமணியம் தேவி,தாளையடி.

சபாரததினம் சாந்தி, குமிழமுனைமுள்ளியவளை, முல்லைத்தீவு,

அம்பலம் ஆனந்தராசா, பொன்னையாவீதி ஆனைக்கோட்டை.

சற்குணநாதன் இளையதம்பி, வரணி இயற்றாலைவரணி. (து-8)

# இன்று ஒரு தகவல்

## புதையலைப் புரிந்துகொள்

ஒரு இளைஞன் ஒரு சாலை ஓரமாக இருந்து அழுது கொண்டு இருந்தான். அந்தப் பக்கமாக பிச்சை எடுத்து உண்ணும் ஒருவன் வந்து கொண்டிருந்தான். இவனிடம் "ஏன் அழுகிறாய்?"என்று கேட்டான்."என்னிடம் ஒன்று மில்லை. இந்த உலகில் நான் இருந்து என்ன பயன்? அதுதான் அழுகிறேன்"என்றான் அவன். "உன்னிடம் மறைந்துள்ள புதையல் என் கண்ணுக்குத் தெரிகிறது. அதை விற்பதற்கு நீ தயாரா?" என்று கேட்டான் இவன். இளைஞனுக்கு ஆச்சரியம் "என்னிடம் ஒரு காசு கூட இல்லையே அப்படி இருக்கும்போது புதையல் எங்கே இருந்து வந்தது?" என்றான் . பிச்சைக்காரன் சிரித்தான். "இப்படித்தான் எல்லோரும் சொல்கின்றனர். நீ என்னுடன் வா நமது ஊர் அரசனிடம் போவோம். உன்னிடம் உள்ள புதையலை அவன் நல்ல விலைக்கு எடுத்துக் கொள்வான்" என்றான். "அது எப்படி உனக்குத் தெரியும் ?" என்றான்.

"இதற்கு முன்பும் இதுபோல் பலரை அரசனிடம் அழைத்துக்கொண்டு போயிருக்கிறேன். அதனால் உன்னையும் அழைத்துக் கொண்டு போகின்றேன் " என்றான். இவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. நம்மிடம் என்னவுள்ளது. இவனே பிச்சை எடுத்து உண்கிறான். இவன் என்னை ராஜாவிடம் அழைத்துக்கொண்டு போவதாகக் கூறுகிறான் என்று யோசித்தான்."என்ன யோசிக்கிறாய். உனக்குப் பணம் வேண்டும் என்றால் என்னுடன் வா" என்றான். அவன். சரி.....இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதை விட அங்கேயாவது போய்ப் பார்ப்போமே என்று புறப்பட்டான்.

அந்த இளைஞனும் பிச்சைக்காரனும் அரண் மனையை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் அந்தப் பிச்சைக்காரன் சொன்னான் "இதோ பார்முன்பே சில விடயங்களை நாம் பேசிக் கொள்ள வேண்டும் சரியாக, தெளிவாக முடிவெடுத்துக் கொண்டு அதன்பின் ராஜாவிடம் போகவேண்டும். ஏனென்றால் அங்குபோய் அதுமுடியாது, இதுமுடியாது என்று சன்டைபோடக்கூடாது. ராஜாவுக்கு விலையை பற்றிக் கவலை இல்லை. எவ்வளவு சொன்னாலும் நமக்குப் பணம் கிடைக்கும். ஆனால் அதன் பின்பு நான் இதை விற்பதற்கு தயாராகஇல்லை என்று சொல்லக்கூடாது. அதனால் புதையலை விற்பதா இல்லையா என்பதை இங்கேயே தெளிவாக முடிவு செய்ய வேண்டும்.

இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னிடம் புதையலா என்று குழம்பினான். இப்போது அந்தப் பிச்சைக்காரன் சொன்னான்."ஆமாம் !இப்போது உதாரணத்துக்கு உன் கண்களை எடுத்துக்கொள் அதற்கு நீ என்ன விலை கேட்டு விடப் போகிறாய்.நான் அதற்கு 50ஆயிரம் ரூபா வாங்கித் தரமுடியும். இதயத்தைக் கொடுத்தால் 20இலட்சம் தருவேன். மூளையைக் கொடுத்தால் 30இலட்சம் வாங்கித் தருவேன்" என்றான். இளைஞனுக்குக் கோபம் வந்துவிட்டது " என்ன உளறுகிறாய்? உனக்கு என்ன பைத்தியமா? கண்ணையும், இதயத்தையும், மூளையையுமா விற்பார்கள் என்ன விலை கொடுத்தாலும் அதையெல்லாம் நான் விற்க மாட்டேன். நான்மட்டுமல்ல யாருமே விற்கமாட்டார்கள்" என்றான்.

இப்போது அந்தப் பிச்சைக்காரன் வாய்விட்டுச் சிரித்தான். இப்போது பைத்தியமானது நானா?நீயா? இலட்சக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபா பெறுமானமுள்ள பொருட்களை உன்னிடம் வைத்துக்கொண்டு விற்க முடியாது என்று சொல்லுகிறாய் என்றான்.இன்று பலர் தன்னிடம் மறைந்துள்ள ஆற்றலைப்புரிந்து கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர். புதையலை நாம் தான் தோண்டி எடுக்க வேண்டும்.

நமது ஆட்கள் புதையலை உள்ளே தேடுவதில்லை. வெளியில் எங்காவது கிடைக்குமோ என்று தேடுவது தான் வழக்கம். ரயில்வே ஸ்ரேசன் பக்கம் வெளியில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக வந்த ஒருவர். கார் சாரதியைப் பார்த்து "ஐயா உங்கள் வண்டியின் பின் ஆசனத்தில் ஒரு கைப்பை கிடக்கிறது. யாரோ மறந்துவிட்டு போய்விட்டார்கள்" என்றார். "இல்லை இல்லை. அது வெறும்பைதான். நான் தான் அங்கே போட்டேன்" என்றார் சாரதி. "ஏன்?" என்றான் இவன். "அதைப் பார்த்தாவது யாராவது வரமாட்டார்களா?" என்று தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வாக்குறுதிகள் அள்ளிவீசுவதை விடுத்து உருப்படியாகச் செயற்படவேண்டும்

## ஐ. ம.சு. முன்னணியைச் சாடுகிறார் பிரதமர்

(கொழும்பு)

வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வழங்காமல், நாட்டின் முக்கிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மக்கள் முன்னால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது மாற்றுப் பிரேரணைகளை முன்வைக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கையினை இம்முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது. இதைவிட எமக்குச் சேரவுள்ள பெருந் தொகைப் பணத்திற்கு வழிகோலிய டோக்கியோ மாநாட்டு நிதி உதவியையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. ஆனால் இவற்றிற்கான மாற்று யோசனைகளை முன்னணி இன்னமும் முன் வைக்கவில்லை.

இவ்விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதில் இம் முன்னணி சரியான கொள்கைகளை கொண்டிருக்கவில்லை. தற்போது எம்மால் நடாத்தப்பட்டு வருகின்ற சமாதான முயற்சிகள் பிழையெனில் இது பற்றிய மாற்று வழிகள் குறித்து அறிவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது.



இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பது எமது சமாதான முயற்சிகளை நெருக்கடிக் குளாக்குவதால் அது நடைபெறக் கூடியதல்ல. பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே. வி. பியும் தற்போதைய பிரச்சினைக்குரிய மாற்றுத் தீர்வினை முன் வைக்கத்தவறிவிட்டன என்று குறிப்பிட்டார். (உ-6)

## சட்டமா அதிபரினால்

# 54 தமிழக மீனவர்களுக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தலைமைப் படகோட்டிகளாகவிருந்து மீன் பிடி விசைப் படகை ஓட்டி வந்து வடபகுதிக் கடலில் அத்துமீறி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழீழ மீனவர்கள் 15 பேர்களுக்கெதிரான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மீனவர்கள் சார்பில் ஆஜரான அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு மேற்படி வழக்கில் தான் சில அறிவுறுத்தல்களைப் பெறவேண்டியுள்ளதால் வழக்கை ஒத்திவைக்குமாறு கோரியதையடுத்து வழக்கு விசாரணையை நீதிபதி இம்மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும், 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர், டிசம்பர் மாதங்களில் தலைமைப் படகோட்டிகளாகவிருந்து நெடுந்தீவுக் கடலில் அத்துமீறி மீன் பிடித்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் தமிழகப் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 13 மீனவர்களுக்கெதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் நேற்று முன் தினம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கோம்பிஸ்ராஜா, பாலசிங்கம் ஆரோக்கியம், சிலுவை குருஸ் அந்தோனி, கிருஷ்ணசாமி சின்னையா, அண்ணாமலைநேசன் ரஞ்சன், ஆறுமுகம் அன்பரசன், இடுமன் ஞானவேல், சந்தியாகு ரீகன், ஆறுமுகம் வடிவேல், மடுக்கயின் சபாபதி, பச்சைவர்த்தன் செல்லக்குமார், செபஸ்தியன் பர்ணாந்து ஜேசுராஜா, செல்லக்காடி மகாசீலன் ஆகியோர்க்கு எதிராக நேற்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றுடன் சேர்த்து யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 67 மீனவர்களில் 54 பேர்களுக்கெதிராக சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# இராசி பலன்

**21. 03. 2004**

**(பங்குனி 08, ஞாயிற்றுக்கிழமை)**

**பிரதமை பின்னிரவு 5.11மணி வரை**

| | |
|---|---|
| உத்தரட்டாதி | முன்னிரவு 11.16 மணிவரை |
| இராகுகாலம் | 4.47-6.17 மணிவரை |
| சுபநேரம் | 9.17-10.47 மணிவரை |

**மேடம்**
அமைதிக்குறைவு, காரிய அலைச்சல், அதிக வார்த்தை, சுப செலவு.

**இடபம்**
எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, தொழிலில் அக்கறை, தனலாபம்.

**மிதுனம்**
அதிகாரம், கலந்துரையாடல், தெய்வ சிந்தை, பிரயாணம்.

**கடகம்**
பிதாசிந்தை, முயற்சி தாமதம், புதிய சிந்தை,எதிர்பாராத நன்மை.

**சிங்கம**
கடன் பிரச்சினை,காரிய தடங்கல், போசனசுகம், உடல் நலக்குறைவு.

**கன்னி**
களஸ்திர நன்மை,பிரயாணசுகம்,காரிய அனுகூலம்,நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
செல்வாக்கு,உற்சாகம்,எதிர்பாராத நன்மை, ஆரோக்கியம்.

**விருச்சிகம்**
மனக்கவலை,காரியஇடையூறு,ரோக நிலை, இடமாற்றம்.

**தனுசு**
தன்னம்பிக்கைக் குறைவு,தன வீரயம், சொத்துகளால் நன்மை,உறவினர் சந்திப்பு.

**மகரம்**
கூட்டு முயற்சி,நற்கீர்த்தி,தனவரவு,போஷன சுகம்.

**கும்பம**
அதிக வார்த்தை,தனவீரயம்,பிரயாணக் கஷ்டம், திடீர் நன்மை.

**மீனம்**
வெகுமானம்,காரியசித்தி,பெரியோர் சந்திப்பு, சயனசுகம்.


**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

- வளவன்.

# பொருளாதார நெருக்கடிக்கும் ரவி கருணாநாயக்காவுக்கும் முடிச்சு போடுகிறார் அனுரா

(கொழும்பு)

அமைச்சர் ரவி கருணாநாயக்கா நாட்டில் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறார். எமது அமைச்சர்கள் ஆட்சிக்கு வந்து 3 அல்லது 4 வருடங்களின் பின்னரே சம்பாதித்தார்கள். ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே சம்பாதிக்கத் தொடங்கி விட்டார்கள்.



இவ்வாறு தெரிவித்துள்ளார் அனுரா பண்டாரநாயக்க தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் மேலும் கருத்துக் கூறிய அவர்,

2வருடங்களின் முன்னர் தான் இந்த அரசைப் பதவி கவிழ்ப்பது எப்படி என்பது பற்றி விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, மங்கள சமரவீர ஆகியோருடன் உரையாடினேன். ஜனாதிபதிக்கு அறிவிக்காமலேயே நாம் நாடு முழுவதும் சந்திப்புகளை நடத்தினோம். மக்களைத் தயார்ப்படுத்தினோம்.

இந்த மக்களை நாம் தயார்ப்படுத்தியபோது இந்த அரசைப்பதவி கவிழ்க்காவிடில் நாம் மின்னலொன்றினால் தாக்கப்படுவோம் எனத் தெரிவித்திருந்தோம்.

பின் கூட்டணி அமைத்தோம். சிலர் என் காலில் பிடித்து இழுத்தார்கள் ஆனால் ஆரம்பம் முதலே அர்ஜுணரணதுங்க எமக்கு ஆதரவளித்தார்.

இவர் உலகக்கோப்பையை 1995இல் பெற்றபோது உலகமக்கள் எமது நாடு பற்றி அறிந்தார்கள். இதே உலகக்கோப்பை தான் ரவி கருணாநாயக்காவை இலங்கைக்கு கொண்டு வந்தது. நாம் ஆட்சிக்கு வந்தால் தொடர்ந்து 20 வருடங்கள் எமது ஆட்சியை தொடருவோம் எனக் குறிப்பிட்டார். (உ-6)

# செய்தித் துளிகள்

## பாடசாலைக்கு அன்பளிப்பு

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்குப் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நிழற்பிரதி இயந் திரமொன்றை அன்பளிப்புச் செய் துள்ளது.

அத்துடன், வித்தியாலய லண் டன் பழைய மாணவர் சங்கம் றோ னியோ இயந்திரமொன்றையும் வழங்கியிருந்ததும் குறிப்பிடத் தக்கது. (தி-52)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலும், அரசியல் நிலைமைகளும் எனும் கருப் பொருளிலான கருத்தரங்கொன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள புதிய ஜனநாயகக் கட்சி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தோழர் சி.நவரத்தினம் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் தோழர்களான சி.கா. செந்திவேல், சோ.தேவராஜா, கா.கதிர்காமநாதன் மற்றும் க.தணி காசலம் ஆகியோர் உரையாற் றவுள்ளனர். (உ-18)

## தீயில் எரிந்து குடிசை நாசம்

(பொன்னாலை)

அடுப்பிலிருந்து பற்றிய தீயி னால குடிசை வீடு ஒன்று எரிந்து சாம்பலான சம்பவம் அண்மையில் வயாவிளான் குட்டியப்புலம என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பொ.தபேந் திரன் என்பவரின் குடிசையே எரி ந்து சாம்பலாகியுள்ளது.

ஆயினும் வீட்டிலிருந்த அவரது மனைவியும் கைக்குழந்தையும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள் ளனர். (உ-49)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செய லகத்திற்குட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் பிரதேச செய லர் ஆ.சிவசுவாமி தலைமையில், இன்று பி.ப1.30 மணிக்கு யாழ். ஹாட்லிக் கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. [illegible] நாயகம் போல் கலந்து கொள்ள வுள்ளார். (உ-3,24)

## கவின் தமிழுக்கு ஆக்கங்களை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

கவின்தமிழ் - 2004 ஆண்டு மலருக்கான ஆக்கங்கள், ஓவி யங்கள் என்பன மாகாண கல்வித் திணைக்களத்தினால் கோரப் பட்டுள்ளன.

மேற்படி நூல் வெளியீட்டுக் கான ஆக்கங்கள் வலயக் கல் விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பேராசிரியர்கள், எழுத் தாளர்கள், கலைஞர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

தமிழ் மொழியின் சிறப்பு அதன் செழுமை புலம் பெயர் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள், வடக்கு -கிழக்கு மாகாணத்தின் பாரம்பரிய வர லாறுகள், பெருமைகள் என்பவ றறை எடுத்தியம்பும் வகையிலான ஆக்கங்களை 30/06/2004க்கு முன்பு ப.ஆனந்தராஜ், உதவிக் கல்விப்பணிப்பாளர் தமிழ்மொழி பிரிவு, மாகாணக் கல்வித் திணைக் களம், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## மணி மண்டபம் அமைப்பு

(இணுவில்)

ஏழாலை மத்தி கண்ணகை அம்மன் கோயிலில் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் புதிதாக மணிமண்டபம் ஒன்று அமைக் கப்பட்டு வருகின்றது.

பொதுமக்களினதும, வர்த் தகப் பெருமக்களினதும் உதவி யுடன மேற்கொள்ளப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-122)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலை யத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயி ற்றுக்கிழமை மு.ப 10.00 மணி க்கு புவியியற்றுறை மண்டபத் தில் 'குளோட் ஷப்றோல்' நெறி யாள்கையில் உருவான "லாபுச் சர்" (இறைச்சிக் கடைக்காரன்) என்னும் பிரெஞ்சு மொழித் திரைப படம், ஆங்கிலத் துணைத் தலைப புக்களுடன் காண்பிக்கப்படவுள் ளது.

படக்காட்சியின் இறுதியில் அ.யேசுராசா, க.சட்டநாதன், ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரின் நெறிப் படுத்தலின் கீழ் கலந்துரையா டல் இடம்பெறவுள்ளது. இதில ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்கு கொண்டு பயன் பெறலாமென ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தொிவித்துள்ளார். (உ)

## ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக் கின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங் கப் பணிமனையில் லீக்கின் தலை வா் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஆடசிக்குழு உறுபபினா் தெரிவு தற்காலிகத் தலைவர் எம். பிரான் சிஸ் தலைமையில் நடைபெற்ற போது கீழ்க் காண்போர் ஏகமன தாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ்.கிளிபேட் அன்ர னிப்பிள்ளை, உபதலைவர்கள் கப்ரின் டீ.ஏ.எம்.குணசிங்கம், எஸ்.ரி. கணநாதன், பீ.ஜேக்கப், ஜே.வை.சந்தியோகு, ஏ.லக்ஸ் மன், செயலாளர் எம்.பிரான்சிஸ், உபசெயலாளர் ஏ.சுரேந்திரன், பொருளாளர் கே.தர்மரட்ணம். (உ-110)

## அம்புலன்சின் சேவை ஸ்தம்பிதம்

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறை வைத்திய சாலை அம்புலன்ஸ் வண்டியின் சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியின் சாரதி விடுப்பில் சென்றிருப்பதன் கார ணமாகவே அம்புலன்ஸ் வண் டியை சேவையில் ஈடுபடுத்த முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது. இத னால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-112)

## ஆவரங்கால் பாடசாலை முதலாமிடம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாட சாலைகளுக்கிடையே அண்மை யில் நடைபெற்ற கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டி நிகழ்வு களில், ஆவரங்கால் நடராஜ இரா மலிங்க வித்தியாலயம் முதலா மிடத்தையும், புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரி இரண்டாமிடத்தை யும், உரும்பிரய் இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (உ-79)

## கணித விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயத்தின் இவ்வாண்டுக்கான கணித விஞ் ஞான வினாடி வினாப் போட்டிகள் தரம் 6, 7, 8, 9, 10, 11 எனத் தனித் தனியே நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் நடாத் தப்பட்டு, முதல் 3 இடங்களையும பெறும் மாணவர் பெயர் விபரங்க ளைத் தர ரீதியாக ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் கோட்ட மட்டப் போட் டிகள் யாவும் ஜூன் மாதம் 19, 20ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும், இதனைத் தொடர்ந்து வலய மட டப் போட்டிகள் ஜூலை மாதம் 10ஆம் திகதி நடைபெறும என்றும் வலிகாமம வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி றெஜினா இருதய நாதன் அறிவித்துள்ளார். (உ-122)

## கிணற்றில் இருந்து ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா, ஓமந்தைப் பிர தேசத்தில் கைவிடப்பட்ட நிலை யில் உள்ள கிணற்றில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்கப் பட்டுள்ளதாக சுவடன் கண்ணி வெடி அகற்றும் குழு தெரிவித் துள்ளது.

ஆட்களில்லாத வீட்டுக் கிணற்றை துப்பரவு செய்த மக் கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டு ள்ளன.

120 மில்லி மீற்றர் மோட்டார் கைக் குண்டுகள் - 18, அறுபது மில்லிமீற்றர் மோட்டார் கைக் குண்டு -1, குண்டுகள் வெடிக்க வைக்கும் உபகரணங்கள் உட்படப் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப் பட்டுள்ளன. அக்கிணற்றில் மேலும் பல ஆயுதங்கள் இருக்கலாம் என றும் சுவீடன் கண்ணிவெடி அகற் றும் குழு தெரிவித்துள்ளது.(ம)

## மூக்குக் கண்ணாடி பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இந்துமா மன்றத்தின் கனடாக் கிளையைச் சேர்ந்த எஸ்.இராமச் சந்திரனால் ஒரு தொகுதி மூக் குக் கண்ணாடிகள் வடமாகாண இந்துமா மன்றத்திற்கு அன்பளிப் புச் செய்யப்பட்டுள்ளன.

மூக்குக் கண்ணாடி தேவைப் படும் வறுமைக்கோட்டிற்கு உட் பட்டோர் அதனை உறுதிப்படுத் தும் கிராம அலுவலரின் கடிதம், மருத்துவச் சான்றிதழ் ஆகிய வற்றுடன் வடமாநில இந்துமாமன் றம், அமைப்பாளர், எஸ்.குண ராசா, தாளையடி, திருநெல்வேலி என்ற முகவரியுடன் பி.ப.2 மணி க்கும் 5 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ)

## மார்ச் மாத சம்பளம் 31ந் திகதிக்கு முன்னர்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான மார்ச் மாத ஊதியங்களை இம் மாதம் 31ந் திகதிக்கு முன்னா் வழங் குமாறு திறைசேரி அறிவித்து ள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை திறைசேரி வெளியிட் டுள்ளது. இச்சுற்றறிக்கை கடந்த வியாழக்கிழமை அரசாங்கத் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார்துறை ஊழியர்களுக்கான மார்ச் மாத ஊதியத்தை எதிர்வரும் 31ந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு தொழில் அமைச்சர் மகிந்த சமர சிங்க தனியார் துறையினரிடம் கேட்டுள்ளார். (ச)

# 14 தமிழகப் படகோட்டிகளுக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடிப்படகுகளின் தலை மைப் படகோட்டிகளாக இருந்து கொண்டு, கடந்த ஆண்டின வெவ் வேறு காலப்பகுதிகளில் காங் கேசன்துறை, நெடுந்தீவு, நயினா தீவு ஆகிய கடற்பரப்புகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் ததாக குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட மேலும் 14 இந் திய மீனவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவ்வாறான 27 பேருக்கு எதிரான வழக்குகள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 67 இந திய மீனவர்களில் இதுவரை 41 பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதி மன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (உ-3)

# கல்வியியல் கல்லூரியில் குழு பிரிந்து மோதல்

(கொழும்பு)

கொட்டகல ஸ்ரீபாத கல்வி யியல் கல்லூரியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதல், பொலிஸாரின் தலையீட் டையடுத்து கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி கல்வியியல் கல்லூரி யிலுள்ள விடுதியில் தங்கிக் கற் கும் மாணவர்களுக்கான உண வுப் பற்றுச்சீட்டு வழங்கப்படாததன் காரணமாக, அவ்விடுதி மாணவர் களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க் கம் கைகலப்பாக மாறியதில் பெரும் மோதல் உருவாகியது.

இச்சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்து சென்ற நுவரெலியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் விஜய மற் றும் பத்தனை பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி வி.செந்தில் வேல் ஆகியோர் பிரச்சினையைச சுமுகமாகத் தீர்த்து வைத்தனர்.

மேற்படி மோதல் சம்பவத்தில் 2 மாணவர்களும் 4 ஊழியர்களும காயங்களுக்குள்ளாகியமை குறிப் பிடத்தக்கது. (உ-18)

## கொடுப்பனவைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி யில் 2003ஆம் ஆண்டில் தம் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தமக்கென கல்வி அமைச்சினால் வழங்கப் படும் ஊக்குவிப்புக் கொடுப்பன வுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் எதிர்வரும் 22,23,25,26ஆம் திகதிகளில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி யின் பதிவாளர் காரியாலயத் தில் இதனைப் பெற்றுக்கொள்ள லாம். (உ-19)

# தமிழர் பலத்தை உலகறிய ஏற்ற தருணம் இதுவே

## எழிலன் எடுத்துரைப்பு

(வவுனியா)

தமிழ்தேசியத்தை வலியு றுத்தும் வகையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் வாக் களிக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் எஸ்.எழிலன் தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் நடைபெற்ற தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தேர்தல் பிர சாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் மேலும் கருத்துத் தெரிவித்த எழிலன்,

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை எனும் கொள்கைகளை முன்வைத்தே இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகிறது.

நாடாளுமன்ற அரசியலிலிரு ந்து அகிம்சை வடிவில் முன்னெடு த்துச் செல்லப்பட்ட தமிழரின் போராட்டம் ஆயுதப் போராட்ட மாக மாறி இன்று சர்வதேச அந் தஸ்தைப் பெற்றுள்ளது. இந்த நிலையில் எமது பலத்தை நாம் ஒரு குடையின் கீழ் நின்று உல குக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றார். (உ-62,8)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

காணாமல் போன, இல.63 வல்லவராயன்கட்டு, ஜயபுரம், கிளிநொச்சி என்ற முகவரியைச் சேர்ந்த சுப்பையா சிவலிங்கம் என் பவர் தொடர்பான மேலதிக தக வல்களைப் பெறும் வகையில் அவரது உறவினரான அன்னம்மா என்பவரை இல.101, வைத்திய வீதி, கொழும்பு -1 இல் அமைந் துள்ள காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவு டன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (உ)

# தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக்கு நிதி

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிறுவனத்திற்கு, இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவராலயம், 6மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங் கியுள்ளது.

இதேவேளை, இலங்கைக் கான நெதர்லாந்துத் தூதுவர் சுஸான் பிளைங்காட், கடந்த சில

## நெதர்லாந்து வழங்கியது

நாட்களாக நாட்டின் தென்பகுதி யில் உள்ள சில மாவட்டங்க ளுக்கு விஜயம் மேற்கொண்டு தேர் தல் நடவடிக்கைகள் தொடர்பான அவதானிப்புக்களை பெற்றுக் கொண்டதாக நெதர்லாந்துத் தூது வராலயம் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-61,10)

# இரண்டு நாள் கலவரத்தில் 31 பேர் படுகொலை

கொக்கொகோவல் வன்முறை தீவிரமடைந்திருப்பதை அடுத்து அமைதிகாக்கும் பணி செய்து வரும் நேட்டோப் படைகளை வலுப்படுத்தும் விதமாக நூற்றுக்கணக்கான கூடுதல் படையினரை ஜேர்மனியும் பிரான்ஸும் அங்கு அனுப்புகின்றன.

ஜேர்மனிய 600 படைவீரர்களையும் பிரான்ஸ் 400 படைவீரர்களையும் அங்கு அனுப்புகிறது.

இதன் மூலம் கடந்த இரண்டு நாட்களில் கொககொகோவுக்கு அனுப்பப்பட்ட கூடுதல் துருப்புக்களின் எண்ணிக்கை 2000க்கும் கூடுதலாக இருக்கிறது.

இதற்கு முன்பு வரை கொக்கொகோவல் நிலை கொண்டிருந்த நேட்டோப் படையினரின் எண்ணிகை 17 ஆயிரமாக இருந்தது.

கொக்கொகோவில் ஐடனி இனத் தீவிரவாதிகளால் சேர்விய சிறுபான்மையினருக்கு எதிராகக் கடந்த இரண்டு நாட்களாகத் தாக்குதல்கள் நடந்திருக்கின்ற நிலையில் அங்கு மென்மேலும் பிரச்சினைகள் வெடிக்க வாய்ப்பு இருக்கிறது என்று கொக்கொகோவை நிர்வகிக்கும் ஐ.நா. மன்றம் கவலை கொண்டிருக்கிறது.

இரண்டு நாள் கலவரங்களில் 31 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கான சேர்வியர்கள் வீட்டை விட்டு விரட்டப்பட்டும் இருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதல்களை எதிர்த்து சேர்விய அரசு பெல்கிரேட்டில் ஏற்பாடு செய்த ஓர் ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருக்கிறார்கள். (து)



சென்னை மெரினா கடற்கரையோர மர நிழலில் வெய்யிலுக்கு இதமாக இளைப்பாறும் சென்னைவாசிகள்.

# அல்–கெய்டா, தலிபானுக்கு எதிராக பாக். நடவடிக்கை

அமெரிக்கா நேட்டோவுக்கு வெளியிலான தனது முக்கிய நாடாக பாகிஸ்தானை அறிவித்து அதனுடன் இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்று அமெரிக்க அரசுத்துறைச் செயலர் கொலின் பவல் கூறியிருக்கின்றார். பாகிஸ்தானுக்குக் கிடைத்திருக்கும் இந்தப் புதிய தகுதி, அது அமெரிக்காவிடமிருந்து புதிய ரக ஆயுங்தகளைப் பெறவும் போர் விமானங்களை வாங்கவும் உதவும்.

ஆப்கானுடனான எல்லையையொட்டிய ஒதுக்குப்புறமான மலைப் பிரதேசத்தில் பாகிஸ் தான் துருப்புக்கள் அல்-கெய்டா மற்றும் தலிபான் ஆதரவாளர்களை எதிரதது இராணுவ நடவடிக் கையைட் புதுப்பித்திருக்கின்ற இந்த வேளையில் இஸ்லாமபாத்திற்கு விஜயம் செய்திருந்த கொலின்பவல் இதனைத் தெரிவித்தார்.

எல்லைப் பகுதியில் ஆயிரம் கிராமவாசிகளை வெளியேற்றிவிட்டு அந்த இடத்தில் விமானங்களையும் பீரங்கிகளையும் கொண்டு தாகதுதலநடத்திவருவதாக பாகிஸதான் இராணுவ அதிகாரியொருவர் கூறினார். கடும் சண்டை நடந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. (து)

# சுடப்பட்ட தாய்வான் அதிபருக்கு ஆதரவாக அனுதாப அலை

(தாய்வான்)

தாய்வானில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலுக்கான இறுதி நாளன்று தாக்குதலுக்கு இலக்காகிக் குண்டுக் காயங்கள் பட்ட அதிபர் ஷென் சூய் பியான் அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியிருக்கிறார்.

தாய்வான் நகரில் அவர் திறந்த ஜீப் வண்டியொன்றில் பயணம் செய்து கொண்டிருந்த போது வயிற்றில் சுடப்பட்டார் துணை அதிபர் அனெட்லூவுக்கு சிறிது காயம் ஏற்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் இரு தோட்டாக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இத் தாக்குதல் தொடர்பாக எவரும் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் இல்லை.

இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்க உதவும் தகவல்களைத் தருபவர்களுக்கு 90 ஆயிரம் டொலர்கள் சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிபரும் துணை அதிபரும் தொலைக்காட்சியில் பதிவு செய்யபபட்ட நிகழ்ச்சி ஒன்றில் தோன்றி தங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுத் தாங்கள் காயம் அடைந்தாலும் இப்பொழுது நலமாக இருப்பதாக மக்களுக்குத் தெரிவித்தார்கள்.

தேசியப் பாதுகாப்புப் பாதிக்கப்படவில்லை என்ற உறுதியை அதிபர் ஷென் சூய் பியான் இந்த ஒளிபரப்பில் மக்களுக்கு வழங்கினார்.

தேர்தல் திட்டமிட்டபடியே அடுத்த சனிக்கிழமை நடை பெறும் என அதிகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலின் விளைவாக அதிபருக்கு பெருந் தொகையான அனுதாப வாக்குகள் கிடைக்கக் கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். (து)

# அல்- கெய்டா, பழங்குடியினருக்கு எதிராக பாக்.இராணுவ நடவடிக்கை

பாகிஸ்தானில் ஆப்கானுடனான எல்லைக்கருகே அல்-கெய்டா தீவிரவாதிகளுக்கும் உளளூர் பழங்குடியின மக்களுக்கும் எதிராகக் கடும் மோதலில் ஈடுபடட பாகிஸ்தான் இராணுவத்தினர் கிட்டத்தட்ட 400தீவிரவாதிகளை சுற்றி வளைத்திருப்பதாக அந்த இராணுவத்தினர் கூறுகின்றனர்.

சில நாட்கள் முன்பு வரை அரசுப் படைகள் நுழைய முடியாதிருந்த பழங்குடியினப் பகுதிகளுக்குத் தற்போது நூற்றுக் கணக்கான படையினர் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அல்கெய்டா தீவிரவாதிகளும் பழங்குடியினப் புரட்சியாளர்களும் பாக். படையினரால் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாகவும் பி.பி.சி.யின் இஸ்லாமபாத் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த இராணுவ நடவடிக்கையில் பெறுமதிமிக்கதோர் இலக்குமசிக்குண்டிருக்கலாமென அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறினார்.

மூத்த அல்-கெய்டா அல்லது தலபான் தலைவரைக் குறிப்பிட அதிபர் முஷாரப் அப்படிச் சொல்லியிருக்கலாமென கருதப்படுகிறது.

அந்த இலக்கு ஒஸாமா பின் லேடனின் சகாவான அய்மான் அல் ஸவஹிரியாக இருக்கலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஒஸாமாவும் ஸலஹிரியும் ஆப்கானில் பாதுகாப்பான ஓர் இடத்தில் இருக்கிறார்கள் என்று தலிபான் சார்பாக பேசவல்ல ஒருவர் கூறினார். (து)



பள்ளிக்குப் போகாமல் கட் அடித்துவிட்டு சென்னை மெரினா பீச்சுக்கு வந்த மாணவர்களை தோப்புக் கரணம் போடச் சொல்லித் தண்டிக்கும போக்குவரத்துக் காவலர்.

# வீட்டின் மீது விமானம் வீழ்ந்து தீப்பற்றியது

(லாஸ்ஏஞ்சலீஸ்)

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலீஸ நகரில் ஒரு வீட்டின் மீது சிறிய விமானம் வழுந்து வெடித்தது.

எனினும் வீட்டில் இருந்தவர்கள் யாரும் காயமடைய வில்லை. விமான நிலையம் அருகே செவ் வாய்க்கிழமை மாலை 5.00மணிக்கு இச்சம் பவம் நடந்தது.60 தீயணைப்பு வீரர்கள் விரைந்துசென்று தீயை அணைத்தனர்.

விமானத்தில். பயணம் செய்தவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை பனி மூட்டம் காரணமாக அப்பகுதியில் வெளிச்சம் குறைவாகத் தெரிந் ததால், விமான நிலையத்தில் இறங்க வேண்டிய விமானம் வீட்டின் மீது விழுந்து விட்டதாக தீயணைப்புத் துறை அதிகாரிகள் கூறினர். (து)




சென்னையில் நடைபெறும் பொருட்காட்சியில் ஹெல்மெட் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தி சென்னைப் போக்குவரத்துக் காவல்துறையினர் வைத்துள்ள பிரம்மாண்ட ஹெல்மேட்.

# 6000 கோடி ரூபா பெறுமதியான பயிற்சி ஜெட் விமானங்கள்

## பிரிட்டனிடமிருந்து இந்தியா வாங்கும்

(லண்டன்)

பிரிட்டனிலிருந்து 66அதிநவீன பயிற்சி ஜெட் விமானங்களை 6000 கோடி ரூபாவுக்கு இந்தியா வாங்குவதற்கான உடன்படிக்கை கையெழுத்தானது.

புதுடில்லியில் மத்திய பாதுகாப்புத் துறைச் செயலர் ராஜேஸ் பிரசாத்தும் இந்தியாவுக்கான பிரிட்டிஷ் தூதுவர் மைக்கல் ஆர்னாட்டும் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள்.

இந்த உடன்படிக்கையின்படி உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய 24விமானங்களை பிரிட்டன் முதலில் வழங்கும்.எஞ்சிய 42விமானங்களும் பிரிட்டனின் அனுமதியுடன் இந்தியாவில் டெலுங்கா விமானத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். இந்திய விமானப் படை விமானங்கள் 72பேருக்கு பிரிட்டன் பயிற்சியளிக்கவும் இந்த உடன் படிக்கையில் வகை செய்யபபட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் அடுத்தவாரம் கையெழுத்தாகும்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

- குறள்

# வலம்புரி

## தேர்தலுக்கான வேஷமா?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத் ததும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தாம் ஆட்சியமைத்ததும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை தொடருவோம் எனக் கூறியிருப்பது அவரின் தனிப்பட்ட கருத்தா அல்லது ஜே.வி.பியினதும் கருத்தா என்பது புரியாமலே உள்ளது.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சியமைத்த தும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக் கள் தொடரப்படுமென ஜே.வி.பி இதுவரை அறிவிக்க வில்லை. இந்நிலையில் ஆட்சியமைத்ததும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை தொடருவோம் என ஜனாதிபதி கூறியதை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளுமா என்ற வினா முன்னெழுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டாமென ஜனாதிபதிக்கு ஜே.வி.ப நிபந்தனை விதித்தால் அந்நிபந்தனையை ஜனாதி பதியால் மீறமுடியாதென்பது அரசியலில் மிக அடிமட்ட அறிவை உடையவர்களுக்கும் நன்கு புரியும்.

ஏனெனில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் ஆட்சி என்பது ஜே.வி.பியினதும் கூட்டுடனேயே அமைக்கப்பட முடியும். அவ்வகையில், தனது நிபந்தனையை ஜனாதிபதி மீறுவாராக இருந்தால் ஜே.வி.பி தான் வழங்கிய ஆதரவை விலக்கிக் கொள்ளும் அத்தகையதொரு நிலைமை ஏற்பட்டால் ஜனாதிபதியின் எதிர்காலம் எவ்வாறாக அமையு மென்பதை காலத்தின் அசைவுகளே தீர்மானிக்கும்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது ஆட்சி அமைத்ததும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை தொடருவோம் என ஜனாதிபதி கூறுவது தேர்தல் கால சோடனையாகவும் இருக்கலாம்.

எதுவாயினும், எதிர்வரும் தேர்தலில் தென்னி லங்கை மக்கள் சமாதானத்தை முன்னெடுக்கும் கட்சியையே ஆட்சிக்கட்டிலில் அமர்த்துவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இதனைப் புரிந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மக்களை தன்வசம் திருப்பி அவர்களின் வாக்கு களைத் பெற்றுக்கொள்வதாக இருந்தால் சமாதானப் பேச்சுக்களில் தான் ஆர்வத்தோடு இருப்பதாக காட்டிக்கொள்வதே ஒரே வழியாகும்.

அதனைச் செய்வதற்காக தாம் ஆட்சி அமைத் ததும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை தொடருவோம் என உறுதிமொழி வழங்குவது தேவையானதொன்றாகும்.

அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய ரணில்விக் கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் அற்று இருப்பது போலவும், விடுதலைப் புலிகள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பேச்சுக்களை தொடரவே விரும்புகின்றனர் என்பது போலவும் ஓர் மாயைத் தோற்றப்பாட்டை ஏற்படுத்துவது அவசியமென ஜனாதிபதி கருதிக்கொண்டார்.

தனது கருத்தியலை நிஜப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட ஜனாதிபதி தாம் ஆட்சியமைத்ததும், தம்முடன் பேச்சுக்கள் நடத்துவது குறித்து விடு தலைப் புலிகள் தன்னுடன் இரகசியத் தொடர்பு களை ஏற்படுத்தியதாக கூறியிருந்தார். ஜனாதிபதி இவ்வாறு கூறியதன் மூலம் சிங்கள மக்களை நம்பவைத்து வாக்குகளை தனதாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றார்.

அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திய பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவையும் தனது கருத்துக்கள் மூலம் சலன மடைய வைப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

இத்தகைய தந்திரங்கள் நாட்டுமக்களை ஏமாற்றுமாக இருந்தாலும் இத்தகைய ஏமாற்று வித்தைகள் மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடும் என்பதை ஜனாதிபதி மறந்துவிடல் ஆகாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது அல்ல அவர்களின் விருப்பு, சமாதானத்தை யார் எட்டுவரோ அவர் களே ஆட்சியில் அமர வேண்டும் என்பதே அவர் களின் விருப்பமாகும்.

எனவே, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணக்கூடியதான சிந்தனைகளை ஊருவாக்க வேண்டுமே தவிர வேஷங்கள் போட்டு, மக்களை ஏமாற்றி வாழ நினைப்பது அழிவுக்கே வித்திடும்.

# மலையக மக்கள் விடயத்தில் தூர நோக்குடன் செயற்படுவோம்

## சந்திரசேகரன் உறுதிப்பாடு

(கொழும்பு)

மலையக அரசியல் என்பது வெறுமனே தோட்ட தொழிலாளர்களையோ அல்லது இளைஞர்களையோ மட்டும் சம்பநதப்படுத்தி செயற்படும்வேலை அல்ல மலை யக தமிழர்களாக இருக்கும் ஒவ்வெருவரையும் இணைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் தான் எமது இலக்கை அடைய முடியும் என்று அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

ராகல கந்தப்பள பகுதி இளைஞர்களின் மத்தியில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அமைச்சர் சந்திரசேகரன் மேலும் கூறுகையில்,

இதனை அடிப்படையாக வைத்தே இம்முறை சமூக சேவை களையும் வாத்தகர்களையும் தொழிற்சங்க வாதிகளையும் மட்டுமின்றி புத்திஜீவிகளையும் இணைத்து தேர்தலில் போட்டியிட முன்வந்தோம்.

எல்லா மாவட்டங்களில் உள்ளவர்களையும் இணைத்துக் கொண்டு ஒரு சமூகப்பணியை மேற் கொள்ளும் போது அந்த முயற்சியில்ஈடுபட்டுள்ளவர்க ளுக்கு உற்சாகம் பிறக்கும். அதேபோல மக்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கும்.

கடந்தகாலங்களில் மலையகத்தில் தோன்றிய புத்தி ஜீவிகளின் அலை வெறுமனே செயலற்றுப் போன மைக்கு ஒரு அடிப்படையில்லாத அரசியலே காரணமாக விருந் தது.

அதன்காரணமாகவே புத்திஜீவிகள் தமது நடவடிக் கைகளில் தாமே விரக்தியடைந்து அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டனர்

ஆனால் மலையக மக்கள் முன்னணி மலையக மக்களின் விரக்தியையும் வேதனைகளையும் புரிந்து கொண்டு அரசியலைத திட்டமிடுகின்றது இன்றோ நாளையோ முடிவு பெறும் பிரச்சினைகளை அனுகாமல் வருங்காலத்தில் எமக்கு ஏற்படப் போகின்ற அரசியல் அநீதிகளைத் தடுப்பதற்கான அரசியலைத் திட்டமிடுகின் றது என்று கூறினாா். (உ)

## உணவு கையாளுவோர்க்கு நெருப்புக் காய்ச்சல் தடை மருந்து

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிக ளில் உள்ள பேக்கறிகளில் தொழில் செய்பவர்கள் யூஸ், ஐஸ்கீறீம் தயாரிப்பாளர்கள் மற்றும் உணவு கையளுபவர்களிற்கும் சுகாதார உத்தியோகத்தர் களால் நெருப்புக் காய்ச்சல் தடுப்பு மருந்து வழங்கப் பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் குடல்சார் தொற்று நோயினால் பலர் பீடிக்கப்பட்டதை அடுத்தே இவ்வாறு உணவு கையாளுபவர்களுக்கு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக ஐஸ்கீறீம் ,யூஸ் தயாரிப்பாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே இத் தடை மருந்து வழங்கப்பட்டு வருகின்றது இத் தடுப்பு மருந்து மூலம் குறைந்தது 3வருடங்களிற்கு மேல் நெருப்புக் காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாக்க முடியும்.

அத்துடன் மேற்படி உணவு கையாளுபவர் களிற்கு உணவு சுகாதாரத்தின் முக்கியத்துவம், தனிநபர் சுத்தம் தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப் பட்டு பாதுகாப்பாண முறையில் மக்களுக்கு உண வைத் தயாரித்து விற்பனை செய்யவும் சுகாதார அதி காரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(உ-225)

## உணவு தயாரிப்பு நிலைய பணியாளர்களுக்கு கருத்தரங்கு

(சுதுமலை )

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக கோட்டை, மானிப்பாய் பட்டினம், பண்டத்தரிப்பு பட்டினம, நாவலி, மாதல், இளவாலைப் பகுதிகளில் உள்ள தேநீர்ச்சாலைகள்,. பேக்கறிகள் குளிர்பான தயாரிப்பு நிலையங்களில் கடமைபுரிபவர்களிற்கு உணவு கையாளும் நிலைய சுகாதாரம் சம்மந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 23ம் திகதி செவ்வாய்கிழைமை பி.ப 2மணிக்கு மானிப்பாய் பிரதேச சபையின் தலைமைச் செயலக மண்டபத்தில் செயலாளர் பி.விக்ரர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்கள உணவு மருத்துவ பரி சோதனை அதிகாரி த.மகாதேவன் மற்றும் மானிப்பாய் சுகாதாரப் பணிமனை, பொதுச சுகாதர பாிசோதக்ாகள் ,உப அலுவலர்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வருமான மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டு உணவுச் சுகாதாரம் தொடர்பான கருத்துரைகளை மேற்படி கருத்தரங்கில் வழங்க உள்ளார்கள் .(உ-252)

## கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் ஜப்பானியப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கணிதம் ,விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் ஜப்பான் நாட்டின் நறுாப்போ பல்கலைக்கழகத்தில் முதுமானிப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனித வள அபிவிருத்தி கல்வி கலாசார அலு வலர்கள் அமைச்சுடன் இணைந்து சர்வதேச ஒத் துழைப்புக்கான ஜப்பானிய முகவர் நிலையம் இந்தப் புதிய புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித் துள்ளது.

இது பற்றி கல்வி அமைச்சின் மேலதிக செய லாளர் இந்திராணி காரியவாசம்கருத்து தெரிவிக் கையில்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் முதல் கட்டமாக தலா மூன்று கணித, விஞ்ஞான ஆசி ரியர்களுக்கு முதுமானிப் பட்டப் படிப்பை மேற் கொள் வதற்கான புலமைப் பரிசில்கள் வழங் கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 3 வருடகால கறபித்தல் அனுபவம் கொண்ட 35வயதுக்கு உட்படடட ஆசிரியாகள் அல்லது சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஜப்பானிய புலமைப பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.மேற்படி தகைமை களைக் கொண்ட ஆசிரியர்கள் தமது மாகாணப் பணிப பாளருடாக எதிர்வரும் எப்ரல் மாதம் 15ம்திகதிக்கு முன் னர் தமது விண்ணப்பப்படிவங்களை கொழும்பு-07ல் அமைந்துள்ள சர்வதேச ஒத்துழைபபுக்கான ஜப்பானிய முகவா நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்றார்.

(உ-61,10)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆன்மீக இலட்சியத்தைப் புறக் கணித்து வீட்டு மேலை நாட்டு நாகரிகத் தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலை முறைகளில் உனது இனம் அழிந்து விடும்.

சுவாமி விவேகானந்தர்.

## தவக்கால சிந்தனை-25

சிறைச்சாலைக்கு சென்று கைதிகளிடம் பணிபு ரியும் ஒருகுரு, ஒருமுறை புதிதாக தண்டனை பெற்ற ஒரு கைதியிடம் அவரது தோள் மீது ஆதரவாக கை வைத்து ‘நண்பனே, ஏன் இங்கு வந்தீர்கள்? எனக் கேடடாா். கைதியின் கண்களில் கண்ணீா! ‘தந்தையே, இது போல் இதற்கு முன்பு யாராவது என் தோள்மீது கை போட்டு அன்பைக்காட்டியிருந்தால் நான் இங்கே வந்திருக்க மாட்டேன், என்றாராம் இது தான் வாழ்க்கை என்று ஏமாற்றுதல்,!சூழ்ச்சி திருட்டுக் கொலை,போன்ற பல குற்றங்கள் புரிந்து வாழ வழி யிழந்தவர்கள் இன்று சமூகத்தில் நிறைந்து விட்ட நிலை. பாவிக்கு தண்டனை, மற்றும் மரணம் என்கின்ற இருண்ட சூழ்நிலையில் யேசுவின் போதனை கலங்கரை விளககாய்திகழ்கிறது. அதுதான் அன்புமன்னிக்கும் அன்பு, பல குற்றங்கள் என கடவுளுக்கு எதிராக குற்றங் களை புரிந்திருந தாலும அவர் அரவணைத்துக் கொள்ள ஆசையாய இருக்கிறார் என இயேசு தெய்வம் காட்டுகிறார். பழைய எட்பாட்டில் கடவுளுக்கு எதி ராக மக்கள் எவ்வளவோ குற்றம் புரிந்திருந்தாலும் தனது அன்பினால் மன்னித்து அவர்களுக்கு பெரும் பரிசாக நாட்டையே வழங்கினார். நமக்கு கடவுளிடம் எழுந்து செல்ல தைரியம் மட்டும் வேண்டும். குற்றம் புரிந்தவரை கடவுளிடம் எழுப்பி கூட்டிச் செல்ல நமக்கு விருப்பம் வேண்டும். குற்றம் புரிபவர்களை அன்பினால் அரவணைத் துக் கொள்ளும் போது பாவம் இருந்த இடம் தெரி யாமல் போகும் அன்பு எல்லாவற்றையும் அன்பு மயமாக்குகின்றதல்லாவா!

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# தமிழ்த்தேசிய தலைமையின் வழிகாட்டலில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் தேர்தல் இது

## கூட்டமைப்பு வேட்பாளர் பத்மினி சிதம்பரநாதன்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை விட இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் முன்னிலும் மாறுபட்டது. தமிழ்த் தேசியத் தலைமையின் வழிநடத்தலின் கீழ் கொள்கை வழி நின்று அதற்காக ஒன்றுபட்டு எதிர்கொள்ளும் தேர்தல் இது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பெண்கள் பண்பாட்டு மையத்தால் நடாத்தப்பட்ட பெண்கள் எழுச்சிச் சங்கமும்,பெண் வேட்பாளர் அறிமுகமும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உலகில் எவருக்கும் கிடைக்காத ஒப்பற்ற தலைவனோடு தமிழினம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. சுயநலம் களைந்து தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக இன்னும் கடுமையாக உழைப்போமாயின் விடுதலை என்ற பெருவாழ்வை விரைவில் அடைவது உறுதி. அந்த விடுதலைக்கான படிக்கற்களாக நடைபெற இருக்கின்ற தேர்தலை நாம மாற்றியமைக்க வேண்டும். பொதுவாகப் பெண்களின் பிரச்சினைகள் வெளி உலகுக்குத் தெரியவருவதில்லை, அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றை பெண்களால் தான் உணரமுடியும். இத்தேர்தல் மூலம் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி பெண்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அவற்றுக்குத் தீர்வு காணவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி எமது தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றார்.

அங்கு உரை நிகழ்த்திய தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, இராணுவ நெருக்கடிகளினால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்ட போதும் பெண்களும் குழந்தைகளும் மிக மோசமாகப் பாதிப்படைந்தனர். எனினும் எமது போராட்டம் மக்கள் போராட்டம், மக்கள் போராட்டம் தோற்றதாக வரலாறு இல்லை. எனவே விடுதலையை விரைவில் வென்றெடுக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியத் தலைமையின் வழிகாட்டலின் கீழ் பயணிக்க இத்தேர்தலைப் பயன்படுத்த வேண்டுமெனக் கூறினார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் பெண் போராளிகள் உட்பட பெருமளவான பெண்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் விடுதலைக்கு மகளிர் எல்லாம் வேட்கை கொண்டனர்... என்ற பிரகடனமும் வெளியிடப்பட்டது. தொடர்ந்து மேள வாத்திய இசைகளுடன் வீதிகளுக்கு வந்த பெண்கள் மக்களை அணுகி உரையாடினர். (து)

## இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற்

# இலங்கை அணி மண் கௌவியது அவுஸ்திரேலியா வெற்றி வாகை

இலங்கை அணிக்கெதிரான கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நேற்றுக் காலை நிறைவுற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் 27 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

வெற்றிபெறுவதற்கு 51 ஓட்டங்களை மட்டுமே நேற்றைய முழு நாளும் பெறவேண்டிய இலங்கை அணிக்கு, நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருந்த சமிந்தவாஸ் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் அந்த நம்பிக்கை அற்றுப்போனது.

இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த வெற்றியினை அடுத்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை 2:0 என்ற ஆட்டக் கணக்கில் அவுஸ்திரேலிய அணி தனதாக்கிக்கொண்டது.

மேலும், அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் வோவை அடுத்து அவுஸ்திரேலிய அணியின் தலைமைப்பதவியைப் பொறுப்பேற்ற றிக்கிபொண்டிங் தனது முதலாவது முயற்சியிலே வெற்றிகண்டமை சிறப்பம்சமாகும்

இலங்கையின் இரண்டாவது இனிங்ஸில் 90 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்றினை வீழ்த்தி போட்டியில் மொத்தமாக 155 ஓட்டங்களுக்கு10 விக்கெற்றுக்களை வீழ்த்திய ஷேன் வோன் இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக தெரிவுசெய்யப்பட்டார்.

### ஸ்கோர் விபரம்

**முதலாவது இனிங்ஸ்**

- அவுஸ்திரேலிய அணி-120 ஓட்டங்கள்
- இலங்கை அணி -211 ஓட்டங்கள்

**இரண்டாவது இனிங்ஸ்**

- அவுஸ்திரேலிய அணி -442 ஓட்டங்கள்
- இலங்கை அணி - 324 ஓட்டங்கள் (உ-121)

# இந்து கலாசார அமைச்சின் இரண்டு வாகனங்கள் பறிமுதல்

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான மகேஸ்வரனின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த இந்து கலாசார அமைச்சிற்கு சொந்தமான இரண்டு பேருந்துகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இப்பேருந்துகள் மகேஸ்வரனின் தேர்தல் பிரசார பதாகைகளாலும், சுவரொட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டு கொழும்பு நகரில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வந்ததாக தெரிவித்துள்ள கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸார் இப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பாக தாம் கைது செய்த இருவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ந)

## கண்ணீர் அஞ்சலி

வலம்புரி ஆசிரியபீடத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும்

செல்வி த.மூதினி அவர்களின் அன்புத் தந்தையார்

### செல்லையா தம்பிப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது ஸ்தாபனத்தில் பணிபுரியும் சக ஊழியர்

வேல்முருகனின் அன்புத் தந்தையார்

### நாகமுத்து கிருஷ்ணர்

அவர்கள் 20.03.2004 சனிக்கிழமை இயற்கை எய்தியதை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கஜமுகன் ஹாட்வெயர்
உரிமையாளர், சக ஊழியர்கள்.

பனை அபிவிருத்திச்சபை
புழுக்கொடியல், பனாட்டு கொள்வனவு
புதிய தரமான பொருட்கள் கொள்வனவு
செய்யப்படுகின்றது

| | |
|---|---|
| பனாட்டு கிலோ | ரூ. 165.00 |
| புழுக்கொடியல் கிலோ | ரூ. 50.00 |
| பச்சை ஒடியல் கிலோ | ரூ. 60.00 |

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி,

சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை,
859, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.:- 222 2034

# சுகாதார அமைச்சரிடம் ஜனாபதி தொடுத்த வினா

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் நடாத்தும் வேலை நிறுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுகாதார அமைச்சர் பி. தயாரத்னவிடம் வினாவியுள்ளார்

அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஜனாதிபதியால் இவ் வினா எழுப்பப்பட்டிருக்கின்றது.

ஒரு வார காலத்துக்கு மேலாகத் தொடரும் அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் இலட்சக்கணக்கான நோயாளர்கள் அவதிப்படுவதாகவும் சுகாதார அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச மருத்துவர்களின் வேலை நிறுததப் போராட்டத்தை முடிவு செய்வதற்கான யோசனைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சரை அவர் கேட்டுள் ளார். (உ-60,10)

# யாழ். பல்கலைக்கழக வேந்தராக பேராசிரியர் சிவசூரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தராக, வாழ்நாள் பேராசிரியர் மயில்வாகனன் சிவசூரியவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இவர் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 25 வருடங்களுக்கும் மேலாக மகப்பேற்று, பெண் நோயியல் மருத்துவ நிபுணராகக் கடமையாற்றிய இவர், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளராகவும் கால் நூற்றாண்டு காலம் பணி புரிந்துள்ளார்.

முன்னர் யாழ்.பல்கலைக்கழக வேந்தராக கடமைபுரிந்த பேராசிரியர் ரி.நடராஜா மரணமானதையடுத்தே அவரின் இடத்திற்கு சிவசூரிய நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

### இரகசியப்...

டியில், மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததும், தமிழீழ விடுதலைப புலிகள் பேச்சுக்களை நடத்த சம்மதம் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறி வருவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தன்னுடன் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறிவருவது உண்மைக்குப் புறம்பான சம்பவங்களாகும். இதனை விட ஜனாதிபதியின் செயலகம் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாக ஜனாதிபதி கூறிவருவதும் உண்மைக்குப் புறம்பானதும், தவறானமையுமாகும்.

இனப்பிரச்சினைக்குரிய' தீர்வில் தென்னிலங்கை மக்கள் ஆர்வம் கொண்டிருப்பின், அதனை இத் தேர்தல்மூலம் அந்த மக்கள் எடுத்துக் காட்டவேண்டும். அதற்காக விடுதலைப் புலிகள் காத்திருக்கிறார்கள் என்று தெரிவித்த தமிழ்ச்செல்வன் தென்னிலங்கை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு சிங்களக் கட்சிகள் இவ்வாறான கருத்துக்களைக் கூறிவருவது வழமையான சம்பவங்கள் என்றும் வர்ணித்துள்ளார். (ம)

---

### ரணிலின்...

இந்தக் கருத்துக் கணிப்பில், 46 வீதமானோர் பிரதமரின் சமாதான முயறசியை வரவேற்றுள்ளனர். ஜனாதிபதியின் சமாதான முனைப்பை 30 வீதமானோரே வரவேற்றுள்ளனர். 28 வீதமானோர் இந்த இருவருமே சமாதான முன்னெடுப்பை உரிய முறையில் முன்னெடுக்கவில்லையெனத் தெரிவித்தனர். பிரதமரின் சமாதான முனைப்பை 50 சதவீதமான தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் விரும்புகின்றனர். ஜனாதிபதியின் சமாதான முனைப்பை 37 வீதமான சிங்களவர்கள் வரவேற்கும் அதேவேளை, 2.3 வீதமான தமிழர்கள் மாத்திரமே அதற்கு விருப்பம் தெரிவித்தனர். கல்வி, சுகாதாரம், வேலைவாயப்பு போன்ற நடவடிக்கைகளில பிரதமர் ரணிலை விட ஜனாதிபதி சந்திரிகாவின் எண்ணங்களுக்கு அதிகளவானோரின் ஆதரவு கிடைத்துள்ளது. யுத்தத்துக்கு எதிராக 75 வீதமானோர் கருத்துத் தெரிவித்தனர். ஊழல்களுக்கு எதிராக ஜனாதிபதியோ, பிரதமரோ, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லையென 39 வீதமானோர் குறிப்பிட்டுள்ளனர். எதிர்வரும் தேர்தலில் 89 வீதமானோர் தமது வாக்குகளைச் செலுத்துவர் என இந்தக் கருத்துக் கணிப்பிலிருந்து தெரியவந்திருப்பதாக மாற்றுக் கொள்கைக்கான நிலையம் தெரிவித்துள்ளது. (ந)

---

### வடக்கின்...

கர்கள் மைதானத்திற்குள் இறங்கி பெரும் களேபரத்தில் ஈடுபட்டனர். இதனால் போட்டியை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கிரிக்கெற் வீரர்களும் உடடியாக மைதானத்தைவிட்டு வெளியேறினர். ரசிகர்கள் பெரும் ஏமாற்றத்தில் திரும்பினர். மேற்படி சம்பவத்தையடுத்து யாழ். மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரை, பரியோவான் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன், யாழ். மத்தியகல்லூரி விளையாட்டு அவை மற்றும் நடுவர் குழு என்பன கூடி ஆராய்ந்து பரியோவான் கல்லூரி அணி வெற்றிபெற்றதாகத் தீர்மானித்து அறிவித்தனர்.

இப்போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாக பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த ரி.மதன்ராஜ், சகல துறை ஆட்டக்காரனாக பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணகுமார், சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்தியகல்லூரியைச் சேர்ந்த ஏ.ஜசிந்தன், சிறந்த பந்துவீச்சாளராக மத்தியகல்லூரியைச் சேர்ந்த ரி.ரஜீவ்குமார், சிறந்த பந்துத் தடுப்பாளராக பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த சி.எம்.டினேஷ் (உப தலைவர்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்கான பரிசளிப்பு இன்று காலை 9.மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும்.

இதேவேளை, இரண்டு கல்லூரிகளின் பழையமாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இன்றும், எதிர்வரும் 24ந் திகதி 50ஓவர்கள் கொண்டமட்டுப்படுத்தப்பட்ட போட்டியும் இடம்பெறவுள்ளது.(த)

---

### ஜனாதிபதியுடன்...

உண்மைக்குப் புறம்பானதும், பொறுப்பற்றதுமான கருத்துக்களை ஜனாதிபதி வெளியிட்டுள்ளமை எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

பொறுப்புள்ள ஜனாதிபதி ஏன் இப்படி நடந்தார் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. நாம் ஜனாதிபதியுடன் தொடர்பு வைக்க முயற்சிக்கவில்லை. இருந்தபோதும், கிழக்கின் முக்கியத்துவத்தை காலம்தான் தெற்கிற்குப் புரியவைத்திருக்கிறது என்றும் கூறியுள்ளார் . (த)

---

### பாதுகாப்பு...

அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பணிப்பாளர் மகிலால் டி சில்வா தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் பள்ளிமுனைச் சந்தியில் பாதுகாப்புக் கடமையில் இருந்த விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சென்ற வாகனத்தை மறித்துச் சோதனையிட்டனர். இதன் போது, வாகனத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 9 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி-1, அதற்குரிய மகசின்-2, ரவைகள்-30 என்பன அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட மூவரும் சம்மாந்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்த நீதிவான் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் நீதிமன்றில் ஆஜராகவேண்டுமென உத்தரவிட்டார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் நெருங்கிவரும் சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரின் ஏற்பாட்டிலேயே மேற்படி ஆயுத நகர்த்தல் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. (த)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.